Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா




அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1617) T.P.-2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 12 (09.10.2003) வியாழக்கிழமை இதழ்:09


ஊடகவியலாளருக்கு விளக்கமளிக்கிறார் திலக்.

## குரங்குபாஞ்சான் உண்மைநிலை ஊடகவியலாளருக்கு விளக்கம்!

(திருகோணமலை)

கொழும்பு மற்றும் உள்ளூர் செய்தியாளர்கள் அடங்கிய குழுவினரை விடுதலைப் புலிகள் நேற்று குரங்குபாஞ்சான் முகாமிற்கு அழைத்துச்சென்றனர்.

திருகோணமலையிலிருந்து 32 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இந்த முகாமுக்கு பத்திரிகையாளர்கள் செல்வதற்கான ஏற்பாட்டினை திருமலை மாவட்ட கண்காணிப்புக் குழுவினர் செய்திருந்தனர்.

திருமலை மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் குச்ஸ்பயர் தலைமையில் சென்ற பத்திரிகையாளர்கள் குரங்குபாஞ்சான் முகாமைப் பார்வையிட்டனர்.

கொழும்பிலிருந்து வந்த பத்திரிகையாளர்களுக்கான பயண ஏற்பாட்டினை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் ஒழுங்குசெய்திருந்தது.

குரங்குபாஞ்சான் முகாமில் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவித்த திருமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திலக் தெற்கிலுள்ள மக்களுக்கு கொழும்பிலுள்ள பத்திரிகைகள் இந்தப் பயணத்தின் பின்னர் உண்மையைச் சரியான முறையில் தெரிவிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

### சாவகச்சேரி - கச்சாய் வீதிப் பகுதியில்

## ராணுவ பஸ் மோதியதில் குடும்பப் பெண் படுகாயம்!

### முகாம் முன்பாகக் கூடி மக்கள் ஆர்ப்பாட்டம்

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி - கச்சாய் வீதியில் இராணுவத்தினரின் பஸ் வண்டி மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் திரண்ட மக்கள் அருகிலுள்ள இராணுவ முகாம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.**

நேற்றுமாலை நடந்த இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த ராம்குமார் ஜேசுராணி (வயது 27) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார். தலை, நெஞ்சுப் பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் இவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்த இராணுவ வாகனத்தைச் செலுத்திவந்த இராணுவச் சாரதி கச்சாய் வீதியின் புகையிரதக் கடவைக்கருகேயுள்ள படைமுகாமிற்குள் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனச் சாரதியின் இந்தச் செயலால் ஆத்திரமடைந்த அந்தப் பகுதி பொதுமக்கள் ஒன்று திரண்டு குறித்த முகாமிற்கு முன்னால் நேற்றிரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளின் போராற்றல் உயர்ந்துள்ளது!

### பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் ஆற்றல்கள் உயர்ந்துள்ளதை தாம் ஏற்றுக்கொள்வதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் செயற்படுவதற்கும் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் நிலைநாட்டுவதற்கு தாம் முனைவதாகவும் அவர் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் திருகோணமலை துறைமுகத்துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அதற்கு எதிராக செயற்பட்டு துறைமுகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் போராற்றல் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

### பிரதமர் ரணில் இந்தியா விஜயம்

சமாதான முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்க, மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 19 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ளார்.

இந்தியா செல்லவுள்ள பிரதமர் சமாதான நகர்வுகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் இருநாடுகளுக்குமிடையேயான பொருளாதார ஒத்துழைப்புக்கள் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழுவினர் மன்னாரில் படையினருடன் சந்திப்பு!

மன்னார் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினருக்கும் மன்னார் மாவட்ட படை அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை 11.30 மணிக்கு சந்திப்பொன்று நடைபெற்றது.

மன்னாரில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்விற்கு படையினரால் எந்த இடையூறும் ஏற்படமாட்டாது. மாறாக படையினர் தமது ஒத்துழைப்பைப் பூரணமாக வழங்குவார்கள் என, இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பெர்ணான்டோ தெரிவித்தார்

மன்னார் மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் எரிக், அவரது உதவியாளர் தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)









டப்ளினில் இடைக்காலத் திட்டவரைவை இறுதிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள புலிகள் தரப்புக் குழுவினருடன் நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் காணப்படுவதை முதலாவது படத்திலும், தமிழ்ச் செல்வன், கேணல் கருணா, உருத்திரகுமாரன் ஆகியோர் சட்ட நிபுணர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடுவதை இரண்டாவது படத்திலும் தமிழ்ச் செல்வன் மற்றும் கருணா ஆகியோர் நிபுணர் ஒருவருடன் தனித்தனியாகக் கைலாகு கொடுப்பதை அடுத்த இரு படங்களிலும் காணலாம்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226[illegible]7
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# விடுதலைக் கனவோடு உழைத்த இசைமாமணி வீரமணிஐயர்!

## கலை பண்பாட்டுக் கழகம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைக் கனவோடும், கலைத்தாகத்தோடும் இறுதிவரை உழைத்த இயல் இசை வாரிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களின் இழப்பை, தமிழீழம் இழந்துவிட்டது.

இவ்வாறு இசைமாமணி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் மறைவையொட்டி விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இசைமாமணி என்றும், இயல் இசை வாரிதி என்றும் தமிழுலகம் போற்றிப் புகழ்ந்த பெருங்கலை விற்பன்னரான பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்களின் மறைவு எல்லோருக்குமே பேரிழப்பாகும். அரைநூற்றாண்டு காலமாக தன்னுடைய புலமையாலும், இசைத் திறனாலும், ஆடற்கலையை அளித்த சிறப்பாலும், எங்கள் மண்ணைப் பெருமைப்படுத்தியவர் வீரமணி ஐயர் அவர்கள். ஈழத்திலும், தமிழகத்திலும் இசை உலகுடன் பரிச்சயமுடைய எல்லோருக்கும் வீரமணி ஐயர் என்றால், அபாரமான அவருடைய எல்லாத்திறன்களும் தெரிந்திருக்கும்.

கர்நாடக சங்கீதத்தையும், பரதத்தையும் கற்றறிந்து, அதில் பரிசோதனைகள் பல செய்து, தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி பலரை வியப்படையச் செய்த சிறந்த ஒரு ஆளுமையாக வீரமணிஐயர் எம்மோடிருந்தார். இவரை மெச்சிப் புகழாதார் எவருமே இல்லை. இந்தியாவின் புகழ்வாய்ந்த இசை மேதைகள் பலரும் கூட, வீரமணி ஐயர் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள். மெச்சி இருக்கிறார்கள். அவர்களால் யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் என்று - அன்பாகவும், மதிப்பாகவும் அழைக்கப்பட்டவர், குறிப்பிடப்பட்டவர்.

தான் பெற்றுக்கொண்ட கலைத்திறனை எல்லாம், தன் சந்ததிக்கு அளித்துப் பெருமைகொண்ட ஒரு பெரும் இசையாளராக, கலையாளராக வீரமணிஐயர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர். புதிய சாகித்தியங்கள் இயற்றுவதிலும், புதிய முத்திரைகளை உருவாக்குவதிலும் இறுதிவரை தீராத ஆர்வம் கொண்டவர். இந்த ஆர்வம் அவரை எப்போதும் இயங்கச் செய்யும் ஒரு தீவிர செயற்பாட்டுக் காரனாகவே வைத்திருந்தது.


நூற்றுக்கணக்கான மாணவர்கள் வீரமணிஐயர் அவர்களின் இசையையும், பரதத்தையும் மிக விஸ்தாரமாகப் பெற்றார்கள். ஒரு பெரும் மாணவப் பரம்பரையே ஐயரின் திறனால் பயன்பெற்றது.

வீரமணிஐயர் அவர்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும், எமது தலைமையின் மீதும் மிகுந்த மதிப்பையும், பற்றையும் கொண்டிருந்தார். அதற்கு ஒரு சான்றாக அவர் தமிழீழன் என்ற பெயரிலே போராட்டத்திற்கு உத்வேகம் அளிக்கும் பொருட்டு - பாடல்களையும், கவிதைகளையும், நாட்டிய நாடகங்களையும், ஆக்கி அளித்தார். எமது புலிகளின் குரல் வானொலியில் பல நிகழ்ச்சிகளைச் செய்தளித்தார். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்துடன், மிக நெருக்கமான உறவுகொண்டு தன்னுடைய முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார். மிக நெருக்கமாகப் போராளிகளுடன் பழகுவதிலும், அன்பாக உறவாடுவதிலும், அவர்களுடைய பணிகளில் இணைந்திருப்பதிலும், பெருமையோடு தன்னை ஈடுபடுத்தியவர். இதனால், போராளிகளிடமும் எமது அமைப்பிடமும் மதிப்புப் பெற்றவராக இருந்தார்.

இத்தகைய சிறப்புக்கும், பெருமைக்கும் மதிப்புக்குமுரிய இசை மேதையை, கலை வல்லுநரை இன்று தமிழுலகம் இழந்து நிற்கின்றது. இசைமாமணியின் இழப்பால், துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு, தமிழீழக் கலைஞர்களோடு எமது அமைப்பின் சார்பாக - எம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல் நாள் ஆட்டத்தில் வலுவானநிலையில் இந்தியா




இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ரெஸ்ற, நேற்று அகமதாபாத்தில் ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் ஆடத்தொடங்கிய இந்திய அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில், 249 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இதில் - இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வீரேந்தர் ஷேவாக், ஒரு நாள் ஆட்டம் போல அதிரடியாக ஆடி, 32 பந்துகளில்-29 ஓட்டங்களை எடுத்த நிலையில் டரல்ரபியின் பந்துவீச்சில், எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். மற்றைய அறிமுக ஆரம்பத் துடுப்பாட்டவீரர், ஆகாஷ் சோப்ரா 116 பந்துகளில் 42 ஓட்டங்களை எடுத்த நிலையில், டானியல் வெற்றோறியின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 38 பந்துகளில் 08 ஓட்டங்களை எடுத்த நிலையில், ஸ்ரைஸின் பந்துவீச்சில் ஸிலிப்பில் நின்ற அஸ்ரலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அணியின் உபதலைவரான ராகுல் ட்ராவிட் நிதானமாகவும் பொறுமையாகவும் விளையாடி, 235 பந்துகளை எதிர்கொண்டு, 110 ஓட்டங்களை எடுத்த நிலையிலும், வி.வி.எஸ்.லக்ஷ்மன் 120 பந்துகளை எதிர்கொண்டு 56 ஓட்டங்களை எடுத்த நிலையிலும் ஆடிக்கொண்டிருக்கின்றனர்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் டரல்ரபி 03 கன்னி ஓவர்கள் அடங்கலாக 21 ஓவர்கள் பந்துவீசி 77 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார். ஜே.டி.பி.ஓரம் 07 கன்னி ஓவர்கள் அடங்கலாக 22 ஓவர்கள் பந்து வீசி 50 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்றவில்லை. எஸ்.பி.ஸ்ரைஸ் 04 கன்னி ஓவர்கள் அடங்கலாக 15 ஓவர்கள் பந்துவீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். டானியல் விற்றோறி 06 கன்னி ஓவர்கள் அடங்கலாக 23 ஓவர்கள் பந்து வீசி 64 ஓட்டங்களைக் கொடுத்து, ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். மக்மிலன் ஒரு கன்னி ஓவர் அடங்கலாக 04 ஓவர்கள் பந்துவீசி ஆறு ஓட்டங்களையும், வைஸ்மன் 05 ஓவர்கள் பந்துவீசி 08 ஓட்டங்களையும் கொடுத்துள்ளனர்.

## போர்நிறுத்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டபோதும்

# தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஏற்ற ஆரோக்கியமான சூழல் இன்னமுமில்லை

போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்து 21 மாதங்கள் முடிவடைந்த போதும், தமிழ் மாணவர்கள் கல்விக்கு ஏற்ற ஆரோக்கியமான கல்விச்சூழல் இன்னும் ஏற்படவில்லை. இராணுவச் சூழலில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுக்கு ஏற்ற ஆரோக்கியமான உளநிலை இருக்காது. எனவே, பாடசாலைகளிலிருந்து ஆயுதப் படைகள் விலக்கப்படவேண்டும்

இவ்வாறு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர்தினத்தையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'சிறந்த உலகுக்கான வாசல்களைத் திறப்பவர்கள் ஆசிரியர்கள்' என்பது எடியுகேசன் இன்ரநாசனலின் இவ்வருடத்துக்கான சர்வதேச ஆசிரியர் தினத்தின் தொனிப்பொருளாகும். அதன் அடிப்படையில் தமிழ்மாணவர்களுக்கு ஒரு சிறந்த உலகுக்கான வாசல்களைத் திறந்து காட்டவேண்டிய பொறுப்பு தமிழர் ஆசிரியர்களுக்கு உண்டு. அப்பாதையில் செல்ல தமிழர் ஆசிரியர்களாகிய நாம் இன்று திடசங்கற்பம் பூணுவோமாக".

### சம்பள உயர்ச்சி

ஆசிரியர்கள் சிறப்பாக சேவை செய்யவேண்டுமெனில், அவர்களுக்கு போதிய சம்பளம் வழங்கப்படவேண்டும். தற்போது திஸ்ஸ தெய்வேந்திரா சம்பள மீளாய்வுக் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையை அமுல்படுத்த வேண்டுமென, தொழிற்சங்கங்கள் அழுத்தம்கொடுத்து வருகின்றன.

வரவுசெலவுத் திட்டத்தோடு அரசு சம்பள அதிகரிப்பை வழங்குமென எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு வழங்காவிட்டால், நாமும் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கத் தயாராகுவோம்.

இந்தச் சம்பளத் திட்டச் சிபார்சுகள் சிறந்த அம்சங்களைக் கொண்டிருக்கின்ற போதிலும், இரு குறைபாடுகளைக்கொண்டிருகின்றன. அவை திருத்தப்படல் வேண்டும்.

ஆகக்குறைந்த ஆசிரியரின் ஆரம்பச் சம்பளம் 10,000 ரூபாவிலிருந்து ஆரம்பமாகவேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவையிலும்,அகில இலங்கை சேவை வகுப்பு 1 இற்கு சமமான ஒரு வகுப்பு உருவாக்கப்படவேண்டும். அத்துடன் மொத்த ஆசிரிய பதவியணியின் எட்டிலொரு பங்கினர் இலங்கை ஆசிரியர் சேவை விசேட வகுப்பில் அமர்த்தப்படல்வேண்டும். இதற்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

### பாடசாலைகள் மீளக்கையளிக்கப்படல் வேண்டும்

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தால் கையளிக்கப்படாத - ஏறக்குறைய 100 பாடசாலைகள் மீளவும் எமது மாணவரின் கல்வி நலன் கருதி கையளிக்கப்படவேண்டும்.

### சமாதானத்தை விரும்பின் தமிழர்களுக்கு, இடைக்கால நிர்வாகத்தைக்கொடு

நாட்டில் நிலைக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தி தேவையெனின, நிலையான சமாதானம் அவசியம். இதற்காக வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தை உடனே எவ்வித முன்நிபந்தனையும் இன்றி வழங்க வேண்டும். இவ்விடயத்தில் அரசு காட்டும் காலதாமதமானது சமாதானத்தையும், பொருளாதார மற்றும் கல்வி அபிவிருத்தியையும் பின்தள்ளும்.

### சர்வதேச சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் விடுக்கும் கோரிக்கை

இன்று தென்னிலங்கைக்கும், விசேடமாக அங்கு சேவையாற்றும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் சங்கங்களுக்கும் நாம் விடுக்கும் செய்தி- இடைக்கால நிர்வாகத்தை தமிழர் தரப்புக்கு வழங்கவேண்டியதன் அவசியத்தை அரசுக்கு அழுத்திக் கூறுங்கள்.

தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை நியமிக்காதீர்கள். தமிழ்ப்பாடசாலைகளுக்கு தமிழர்களையும், சிங்களப் பாடசாலைகளுக்கு சிங்களவர்களையும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம்களையும் நியமித்து சகல இனத்திற்கும் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் சமவாய்ப்பு அளியுங்கள்.

### தமிழர் ஆசிரியர்களுக்கு விடுக்கும் கோரிக்கை

20 வருட யுத்தத்தினால் - அழிந்து போன கல்வியையும், கல்விச்சூழலையும் நாம் மீட்டெடுக்கவும் மீளக் கட்டியெழுப்பவும்

தமிழ் மாணவர்கள் தென்னிலங்கையிலுள்ள ஏனைய மாணவர்களுக்கும், ஏனைய நாடுகளிலுள்ள மாணவர்களுக்கும் எந்தவிதத்திலும் குறைவில்லாதவர்களும், சளைத்தவர்களும் அல்ல என்ற நிலைக்கு உயர்த்துவதற்காக அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் எமது சேவையைத் தொடரவும்

தமிழர் தாயகத்தின் விடுதலைக்கும் நிலையான சமாதானத்திற்கும், இடைக்கால நிர்வாகமொன்றை விடுதலைப் புலிகளின் தலைமையில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த மாகாணங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளை சிங்கள மயமாக்கலிலிருந்து தடுக்கவும்

தேவையேற்படின் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கவும், சர்வதேச ஆசிரியர் தினத்தில் மீண்டும் உறுதி பூணுவோமாக என்று, அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லைடனில் மாபெரும் மலிவு விற்பனை

01.10.2003 முதல் 24.10.2003 வரை மாபெரும் மலிவு விற்பனை ஆடவர்களுக்கான சூட்டிங், சேட்டிங், பொக்ஸ் சேட்ஸ் மற்றும் நங்கையருக்கான ஸ்கேட், பிளவுஸ், சாறிகள், பஞ்சாபி வகைகள், சுடிதார், குழந்தைகளுக்கான சூட்வகைகள் மற்றும் வீட்டுக்கதவுகள், யன்னல்களுக்கான திரைச்சீலைகள் மற்றும் சகலவிதமான துணி வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பொருட்களுக்கும் விசேட கழிவு உண்டு

தொலைபேசி-2222381 (சி1644)



தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையின் ஓராண்டு நிறைவு விழா நெடுந்தீவில் நடைபெற்றபோது பற்சிகிச்சை முகாமில் நோயாளிக்கு பல் சிகிச்சை வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.



சிறுவிளான் பகுதியில் யுத்தத்தில் சேதமடைந்து மீளப் புனரமைக்கப்பட்ட சிறுவிளான் கனசபை வித்தியாலயத்தில் பெற்றோர்கள் சிரமதானத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.



வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மாவீரர் நினைவாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக்குழு நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட வடமராட்சி சிவானந்தா விளையாட்டுக்கழக வீரர்களைப் படத்தில் காணலாம். (116)

# ஊழல்கள் பற்றிய கருத்துக் கணிப்பில்
# இலங்கை அறுபத்தாறாவது இடத்தில்!

(கொழும்பு)

ஊழல்கள் மற்றும் மோசடிகள் குறித்து சர்வதேசரீதியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், இலங்கை அறுபத்தாறாவது இடத்தில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

'வோச்டோக் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்ரநஷனல்' என்ற சர்வதேச அமைப்பு நடத்திய ஆய்வின் முடிவில், ஊழல்கள் குறித்த பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் 102 நாடுகளை ஆய்வுக்காகத் தெரிவுசெய்திருந்த இந்த அமைப்பு - இவ்வாண்டில் 133 நாடுகளைப் பட்டியலிட்டுள்ளது.

வர்த்தகரீதியிலும், கல்விரீதியிலும் மற்றும் அரசியல்ரீதியிலும் இடம்பெறும் ஊழல்கள் குறித்து இந்த அமைப்பு தனது ஆய்வை மேற்கொண்டிருந்தது.

இந்தப் பட்டியலில் ஊழல்கள் குறைந்த நாடாக - முதலாவது இடத்தில் பின்லாந்து இருக்கிறது. ஊழல் மிகுந்த நாடாக - 133 ஆவது இடத்தில் பங்களாதேஷ் இருக்கின்றது.

ஊழல்கள் குறித்த முதல் இருபது நாடுகளின் பட்டியலில், பின்லாந்து, ஐஸ்லாந்து, டென்மார்க், நியூசிலாந்து, சிங்கப்பூர், சுவீடன், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, நோர்வே, சுவிற்சர்லாந்து, பிரிட்டன், கனடா, லக்ஷம்பேர்க், ஹொங்கொங், ஒஸ்ரியா, ஜேர்மனி, பெல்ஜியம், அயர்லாந்து, அமெரிக்கா, சிலி ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இஸ்ரேல், ஜப்பான் ஆகியன 21 ஆம் இடத்திலும் - பிரான்ஸ், ஸ்பெயின் அகியன 23 ஆவது இடத்திலும் - பொஸ்னியா, தாய்வான் ஆகிய நாடுகள் 30 ஆவது இடத்திலும் - மலேசியா, ஐக்கிய அரபு இராசசியம் ஆகியன 37 ஆவது இடத்திலும் - பொலிவியா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் 46 ஆவது இடத்திலும் உள்ளன.

48 ஆவது இடத்தில் மொரிஷியஸ், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும் - கோஸ்ராறிக்கா, கிறீஸ், தென்கொரியா ஆகிய நாடுகள் 50 ஆவது இடத்திலும் உள்ளன.

66 இடத்தை சீனா, பனாமா, இலங்கை, இந்தியா, சிரியா ஆகிய நாடுகள் பிடித்துள்ளன. பொஸ்னியா, டொமினிக்கன் குடியரசு, எகிப்து, கானா, மொராக்கோ, தாய்லாந்து ஆகிய நாடுகள் 70 ஆவது இடத்திலும் - ஆர்மேனியா, ஈரான், லெபனான், மாலி, பலஸ்தீனம் ஆகியன நாடுகள் 78 ஆவது இடத்திலும்- இந்தியா, மாலாவி, ருமேனியா ஆகிய நாடுகள் 83 ஆவது இடத்திலும் உள்ளன.

ரஷ்யா, மொசாம்பிக் ஆகிய நாடுகள் 86 ஆவது இடத்தையும், அல்பேனியா, ஆர்ஜென்ரீனா, எதியோப்பியா, சாம்பியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தன்சானியா, சம்பியா, ஆகிய நாடுகள் 92 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

ஊழல்கள் மோசமாக இடம்பெறும் நாடுகளின் வரிசையில், முன்னணி வகிக்கும் பங்களாதேஷ் 133 ஆவது இடத்தையும் - நைஜீரியா 132 இடத்தையும் - ஹெய்ற்றி 131 ஆவது இடத்தையும் - மியான்மார், பரகுவே ஆகியன 129 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

# 17 இலட்சம் ரூபா ஓய்வூதியத்தை கையாடிய எழுதுவினைஞர் கைது

## குருவிட்ட பிரதேச செயலகத்தில் சம்பவம்

குருவிட்ட பிரதேச செயலகத்தில் கடமையாற்றியவரும் ஓய்வூதியம் தொடர்பான பொறுப்பிலிருந்த எழுதுவினைஞர் - தனது பெயரிலும், அடுத்தவர்களின் பெயர்களிலும் 17 லட்சம் ரூபா ஓய்வூதியத்தை முறைகேடாகப் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர், கடந்த மூன்று வருடங்களாக இந்தத் தொகையைப் பெற்றுள்ளார். இது தொடர்பாக மோசடியில் ஈடுபட்ட எழுதுவினைஞரான எஸ்.ஏ.ஏ.டி.பெரேரா என்பவர் - பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்களில் இவரது அயல் வீட்டுக்காரரும், அலுவலகத்தில் கடமையாற்றும் சிற்றூழியருமே கையெழுத்திட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது இந்த முறைகேட்டில் கல்வித்திணைக்கள ஊழியர்கள் வேறு யாராவது சம்பந்தப்பட்டுள்ளார்களா என்று, பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க சுதந்திரக்கட்சி முடிவுசெய்துள்ளது!

## மத்தியகுழு தீர்மானம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி ஆகிய இரு கட்சிகளும் இணைந்து, மீண்டும் கூட்டணி அமைப்பதற்கு சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அந்தக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டணி அமைத்தாவது, அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி மத்தியகுழு விரிவாக ஆராய்ந்துள்ளது.

இத்துடன், இரு கட்சிகளும் அடுத்தவாரம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது என்றும், கூட்டணி எடுக்கும் முடிவுகளைச் சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், சுசில் பிரேம ஜெயந்த் ஆகிய இருவரும் வெளியிடுவது என்றும் முடிவுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தென்னாபிரிக்காவில் பரவிய காசநோய் மாத்தளை மாவட்டத்திலும் பரவுகிறது!

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

தென்னாபிரிக்காவில் பரவிவரும் லிஸ்மன் லிஸ் என்ற காசநோய் தொற்றுநோயின் தாக்கம், மாத்தளையிலும் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக தென்னாபிரிக்காவில் அதிகளவானோர் இந்த காசநோய் தொற்றுக்குட்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நோய் தாக்கம் தற்போது மாத்தளை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவிவருகிறது. இந்த நோய்க்குட்பட்ட 13 பேர் இனங் காணப்பட்டுள்ளதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோயின் பாதிப்புக்குள்ளான ஒருவர் - மாத்தளை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (01)

# நாடாளுமன்றக் கட்டடத்தை புலிகள் அமைக்கிறார்களாம்!

## ஜே.வி.பி. சார்பு இணையத் தளம் கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் - நாடாளுமன்றக் கட்டடமென்றை இரகசியமான ஒரு இடத்தில் கட்டிவருவதாக, ஜே.வி.பி. சார்பு இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவுக்கும் இடையிலுள்ள இரகசியமான ஓரிடத்தில் இந்த நாடாளுமன்றத்தை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி, பெரியளவிலானதாக நிர்மாணிக்கப்படாதபோதும், அனைத்து நிர்வாகப் பணிகளையும் இலகுவாக ஒருங்கிணைக்கக்கூடிய வகையில், அமைக்கப்படுவதாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியைச் சுற்றி இறுக்கமான பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், வளாகத்தைச் சுற்றிப் பாரிய தும், பலமானதுமான பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

புலிகளின் தலைவர் பிரபாகரன் - இங்கிருந்து நிர்வாக ஒழுங்குகளைக் கவனிக்கக்கூடிய வகையிலேயே, இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இணையச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சமாதானப் பாதயாத்திரை கொழும்பிலிருந்து ஆரம்பம்

கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு ஹர்ஷா விஜேசூரியா என்பவரால் மேற்கொள்ளப்படும் தனிநபர் சமாதானப் பாதயாத்திரை, கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து ஆரம்பமாகியது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் கௌரவத்தோடு, இந்த நாட்டில் வாழ மேற்கொள்ளப்படும் இந்தப் பாதையாத்திரைக்கு -ஆதரவு, உற்சாகம் தருமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பு - 12 இலுள்ள ஏ.ஈ.குணசிங்காவின் சிலைக்கு முன்பாக ஆரம்பமாகி, அனுராதபுரம் போதி விகாரையைச் சென்றடைந்து, மண்டும் கொழும்பிலுள்ள ஏ.ஈ.குணசிங்கவின் சிலைக்கு முன்பு முடிவுறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிரச எவ்.எம், சிரச, ஸ்வர்ண வாஹினி தொலைக்காட்சிகள் மற்றும் சிறி. எவ்.எம். வானொலி சேவையினர் பாதயாத்திரைக்கு அனுசரணை வழங்கியுள்ளனர்.

# கடந்த வருடம் பல்கலைக்கழகத்திற்கு பதிவுசெய்து அனுமதி கிடைக்காதோரும் விண்ணப்பிக்கலாம்!

2002 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளின் அடிப்படையில், பல்கலைக்கழகத்துக்கு ஏற்கனவே பதிவுசெய்துள்ள மாணவர்கள் பதிவுகளை மீளப்பெற்று, 2003 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறின் அடிப்படையில், பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

இதன் பிரகாரம், தமது பதிவுகளை ரத்துச்செய்ய விரும்பும் மாணவர்கள் -இந்தமாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் -குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோளை விடுக்கவேண்டும்.

இதுவரை பதிவுசெய்யாமல், சிறந்த பெறுபேறுகளை எதிர்பார்த்து - பதிவுகளை ரத்துச்செய்த அல்லது அதேபாடநெறிகளுக்குப் புதிதாகப் பதிவுசெய்ய விரும்பும் மாணவர்களுக்கு - வெற்றிடங்களின் நிலைமையைப் பொறுத்து அனுமதி வழங்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

விரும்பும் மாணவர்கள் குறிப்பிட்ட பீடாதிபதிகளுக்கு, இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோக பூர்வ வேண்டுகோளை விடுக்கவேண்டும். இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 2003/2004 கல்வியாண்டு பல்கலைக் கழக அனுமதி கோருவதற்கான காலம் - இந்த மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து இரு அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு

நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து, ஐக்கிய தேசிய முன்னணியின் இரண்டு அமைச்சர்கள் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியதாகத் தெரியவருகின்றது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவரும், பிரதி அமைச்சர் ஒருவருமே - இந்த உயர்மட்ட இரகசியப் பேச்சுகளில் பங்கேற்றதாகத் தெரியவந்துள்ளது. கடந்த சிலவாரங்களாக இடம்பெறும் இந்தப் பேச்சுக்கள் - மிகவும் இரகசியமான முறையில் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை, எந்த நேரத்திலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சராகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராகவும் இருக்கும் கரு ஜெயசூரியாவைப் பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கும், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடவும் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.





ஆசிரியர் தினத்தையொட்டி அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலைக் கிளையினரால் - திருமலை சில்வஸ்ரார் ஹோட்டலில் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த தவநாதன் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும், தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்ட இயக்குனர் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டு மூவினங்களையும் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# விடுதலைக்காக களத்திலும் தளத்திலும் நாம் போராடத் தயாராகவேயுள்ளோம்

"நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்" நூல் வெளியீட்டு விழாவில் அமுதாப்

2000 ஆம் ஆண்டு அரியாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக, தன்னிச்சையாகப் பாரிய படை நகர்வை நடாத்தி, எம்மிடம் அடிவாங்கியவர்தான் சரத்பொன்சேகா. அன்று அடி வாங்கிய வடு, அவரிடம் இன்னும் உண்டு என உணர்ச்சி பொங்கத் தெரிவித்தார் சாள்ஸ் அன்ரனி படையணி களமுனைத்தளபதி அமுதாப். "நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்" நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

திருமலைமண் பெற்றெடுத்த சாள்ஸ், பல பெயர்களில் தலைவரோடு நின்று களமாடியவர. தமிழீழ போராட்ட வரலாற்றில் முதல் தாக்குதல் தளபதியாக மாவீரனாகியவர். கஸ்தூரியார் வீதியில், சிங்களப் பொலிஸாரைத் தாக்கி, ஆயுதங்களை மீட்டார். 1983 ஆம் ஆண்டு தேசத்துரோகிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டு, சுடப்பட்டு காயமடைந்தபோது - என்னை சுட்டு விட்டு, ஆயுதங்களை எடுத்துச்சென்று தலைவரிடம் கையளியுங்கள் என ஏனைய போராளிகளிடம் தெரிவித்தார்.

முதல் மாவீரனாகிய சாள்சின் நினைவாகவே, தலைவர் திருநெல்வேலியில் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டார். இதன் காரணமாக திருநெல்வேலியிலேயே இந்த நூலை வெளியிடத் தீர்மானித்தோம்.

10 ஆண்டுகளல்ல, பத்தாயிரம் ஆண்டுகளானாலும் தமிழரின் விடுதலைக்காக எமது அணி தீர்முடம் போராடும். 1050 மாவீரரை, 15தளபதிகளை இழந்து களத்திலும், தளத்திலும் வெற்றிகளை குவித்தோம். "செய் அல்லது செத்து மடி" என்ற கோட்பாடுடன் போராடினோம். 75 இற்கு மேற்பட்ட கடுமையான போர்க்களங்களைச் சந்தித்தோம். விடுதலைக்காக, சுதந்திரத்திற்காக, உரிமைக்காக, கௌரவத்திற்காக உயிர கொடுத்தோம் உரிமைக்காகப் போராடினோம். போரியல் வரலாற்றில் புதிய அத்தியாயம் படைத்தோம் 240 வருட பழைமை வாய்ந்த - அமெரிக்காவால் பயிற்றப்பட்ட படையணிகளைக் கொண்ட ஆனையிறவை மீட்டோம். தொடர்ந்தும் தமிழரின் விடுதலைக்காகக் களத்திலும், தளத்திலும் போராடத் தயாராகவுள்ளோம். எனத் தெரிவித்தார்.

## மன்னாரில் பொங்குதமிழ் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் பிரசாரம்

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் தொடர்பான சகல ஏற்பாடுகளும் மிகவும் பெரியளவில் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்கள் தோறும், பல்கலைக் கழக மாணவர்கள் சென்று, மக்களை சந்தித்து வருகின்றனர். நேற்று மன்னார் சாவற்கட்டு, புனித சவேரியார் தேசியக் கல்லூரி, தனியார் நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் மீனவர்சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம் போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, பொங்குதமிழ் பற்றியும், பொங்குதமிழ் நடைமுறைகள் பற்றியும் விளக்கமளித்து வருகின்றனர்.

பொங்குதமிழ்ப் பானை நேற்று மன்னாரினை வந்தடைந்து, மன்னார் முருங்கன் பகுதியைச் சென்றடைந்தது. மன்னார் பாடசாலைகளின் பொது விளையாட்டரங்கில் பொங்கு தமிழ் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது தெரிந்ததே.

### வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது


அச்சுவேலி வளலாய் நெசவு சாலையடிப் பகுதியில் இரண்டு இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கைகலப்பில் முடிவடைந்தது.

இந்தச் சம்பவத்தில் சண்டையில் ஈடுபட்ட இளைஞர்கள் - ஒருவருக்கொருவர் வாயினால் கடிபட்டதில், இதேஇடத்தைச் சேர்ந்த சி.உதயகுமார் (வயது 35) என்பவர் பலமான பற்கடி காயங்களிற்கு உள்ளாகி அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

நேற்று முன்தினம நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் காயமடைந்த மற்றும் கைகலப்பில் ஈடுபட்ட இளைஞர்களை, அச்சுவேலி பொலிஸார் விசாரணை செய்ததுடன இனிமேல் இப்படிப்பட்ட சம்பவங்களில் ஈடுபடக்கூடாது என்றும், திருந்தி நடக்குமாறும் எச்சரித்து விடுவித்தனர்.

### வீடியோப் படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்பட காட்சித் தொடரில் அருள் கோப்கரின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட "கதா தோன் கன்பட் ரான்ச்சி" என்னும் மராத்தி மொழிப் படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப் படவுள்ளது. புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் "நிக்கோய் கொகோல்" இன் மூலக்கதையைத் தழுவி இப் படம் ஊருவாக்கப்பட்டுள்ளது.





யாழ்.திருமறைக்கலாமன்றமும் வட்டுக்கோட்டை நாடக விருத்திக் கழகமும் இணைந்து நடத்திய ஈழத்து கூத்து விழாவின்போது, மேடையேறிய ஏகலைவன் தென்மோடி கூத்து மற்றும் கசன்வதை வடமோடி கூத்துக் காட்சிகளைப் படங்களில் காணலாம். (111)

## லெப்.கேணல் விக்டர் நினைவாக மன்னாரில் விளையாட்டுப் போட்டிகள்

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப்.கோணல் விக்டரின் 11 ஆம் ஆண்டு நினைவாக, எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மன்னார் பனங்கட்டிக்கொட்டு எனும் இடத்தில், கரப்பந்தாட்டம் மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

விடுதலைப் போராட்ட ஆரம்ப காலத்தில் தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்ட விக்டர், சிறந்த தாக்குதல் தளபதியாகத் திகழ்ந்தார். 1986 ஆம் ஆண்டு ஐப்பசி 12 ஆம் திகதி, மண்ணிற்காக, தான்கொண்ட இலட்சியத்திற்காக தன்னுயிரை தியாகம் செய்தார். இவர், மன்னார் பனங்கட்டிக்கொட்டு பகுதியைச் சேர்ந்தவர் என்பதால், அவரது 11 ஆம் ஆண்டு நினைவாக, தமிழீழ விளையாட்டுத்துறையினருக்கும், சூசையப்பர் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே போட்டிகள் நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றவென 20 அணிகளும், கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றவென 15 அணிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட, தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கவியாளன் தெரிவித்தார்.

### இலவச கண்பரிசோதனை முகாம்

யாழ். வை.எம்.சி.ஏ. நடாத்தும் இலவச ,கண்பரிசோதனை முகாம், எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 1 மணிவரை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த முகாமிற்கு 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபெறலாம். பயனடைய விரும்புவோர் - எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரை யாழ்.வை.எம்.சி.ஏ அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : ர.கௌசிகன்
முகவரி : ஒஸ்லோ, நோர்வே.

ஆறாவது அகவையில்

பெயர் : சி.சங்கவி
முகவரி : நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றார் ஒப்பம்


## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் உண்ணாவிரதம் தொடர்கின்றது!

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள், தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நான்காவது வாரமாகத் தொடர்கின்றனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலகத்திற்கு முன், சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குபற்றி வரும் இந்த ஆசிரியர்கள், உலக ஆசிரியர்தினமான ஒக்டோபர் 6 ஆம் திகதியைக் கரிநாளாகவும், கறுப்புப் பட்டி அணிந்தும் கொண்டாடினர்.

மேலும், இப்போராட்டத்திற்கு பங்களிக்கும் முகமாக - சம்மாந்துறை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, கந்தளாய் ஆகிய பிரதேசக் கல்வி வலயங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்கள் 140 பேர், கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குபற்றி வருகின்றார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதத்தில் பங்குபற்றிய ஆசிரியர்களைச் சந்தித்த கந்தளாய்ப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் குணரட்ண, தனது ஆதரவினைத் தெரிவித்தும், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு உடன் நியமனம் வழங்கக் கோரியும் - ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், கல்வி அமைச்சருக்கும் அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் சங்கப்பிரதிநிதிகளிடம் கையளித்திருந்தார்.

## முதியோர் தினத்தை முன்னிட்டு இலவச வைத்திய பரிசோதனை

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, கடந்த முதலாம் திகதி முதல் 3 நாட்கள், தொடர்ச்சியாக யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினரால் - வண்ணார் பண்ணைப் பகுதியிலுள்ள சைவபரிபாலனசபை, வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், ஆத்திசூடி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் இலவசமாக நடாத்தப்பட்ட முதியோருக்கான சலப் பரிசோதனை மற்றும் உயர்குருதி அமுக்கப் பரிசோதனைகளின்போது, 189 பேர் இந்த வைத்திய பரிசோதனைகளுக்குட்படுத்தப் பட்டனர்.

இவர்களில் 11 பேர் நீரிழிவு நோய்க்கும், 50 பேர் உயர்குருதி அமுக்கத்திற்கும் ஆளாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, அந்த நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வழிவகைகள் பற்றிய சுகாதாரக் கல்வியும் இவர்களுக்கு வழங்கபட்டது என, மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

### கணினிப் பயிற்சிநிலைய திறப்புவிழா

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் இலவசப் பயிற்சிநிலையம் - இன்று காலை 10 மணிக்கு, 64 கில்னர் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறந்துவைக்கப்படவுள்ளது

இளைப்பாறிய அதிபரான அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

# தக்காளியை பயிரிடும் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

தக்காளியானது பெரும்பாலான விவசாயிகளினால் பயிர் செய்யப்படும் மரக்கறிப்பயிர்களில் ஒன்றாகும். இதில் மூன்று பெரும் பிரச்சினைகளை விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர்.

### 01) தக்காளிப் பூ உதிர்தல்

பூவை இழக்கும் செயன்முறை - பூ உதிர்தல் எனப்படும். பூக்காம்பு மஞ்சள் ஆவதால் பூ உதிர்கிறது. இறுதியில் இப்பூவானது கீழே விழுகிறது அல்லது உலர்ந்து இருக்கிறது. பூ உதிர்தலில் பல காரணிகள் பங்குகொள்கின்றன. இது, சில அழுத்தம் காரணமாக ஏற்படுகிறது. இவ்வழுத்தமானது தாவரப்போசணை, சூழற்காரணிகள் அல்லது இரண்டு காரணிகளதும் சேர்க்கையாகவும் இருக்கலாம். கருக்கட்டல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுத்தும் காரணிகளும், பூ உதிர்வதற்கு காரணமாக அமைகிறது.

#### தாவரப்போசணைக் காரணிகள்

நைதரசன் போசணைமூலம் முக்கியமான காரணியாகும். ஆகக்கூடுதலான அல்லது ஆகக் குறைந்த நைதரசன் பாவனை பூ உதிர்தலிற்குக் காரணமாகிறது.

***சூழற் காரணிகள்-***

#### வெப்பநிலை

ஆகக்கூடுதலான அல்லது ஆகக்குறைந்த வெப்பநிலையானது - கருக்கட்டல் மற்றும் மகரந்தச் சேர்க்கைகள் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துவதன்மூலம், பூ உதிர்தலிற்குக் காரணமாக அமைகிறது. பகல் வெப்பநிலை 90°F இற்குக் கூடுதலாகவும், இரவு வெப்பநிலை 70-75° F இலும் கூடுதலாக வரும்போது, காய் உருவாவதைப் பாதிப்பதன்மூலம், பூ உதிர்தலை ஏற்படுத்துகிறது.

ஆராய்ச்சி முடிவின்படி, உயர் இரவு வெப்பநிலை - பூ உதிர்தலில் கூடுதலான பங்களிப்புச் செய்கிறது.

#### உயர் ஈரப்பதன்

மகரந்தத்திலிருந்து மகரந்தமணி வெளியேறுதல் மற்றும் மகரந்தமணி குறியுடன் ஒட்டுவதில் ஈரப்பதன் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

***மற்றைய காரணிகள்***

- ❋ பெருமளவான காற்று வீசுதல்.
- ❋ சில பூச்சிகளின் தாக்க அழுத்தம் (பனிப்பூச்சி, அழுக்கணவன்).
- ❋ இலைத்தொகுதியில் உருவாகும் நோய்த்தாக்கம்.
- ❋ போதுமான ஒளியின்மை.
- ❋ நீண்டநேரம் ஒளிக்கு வெளிக்காட்டல்.
- ❋ அளவுக்கதிகமான கத்தரிப்பு.

***தீர்வுகள்***

தாவரங்களுக்கேற்ற, பொருத்தமான தாவரப்போசணையை ஏற்படுத்துதல் மற்றும் நல்ல பயிர்ச் செய்கை முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகப் பூ உதிர்தலை தடுக்கலாம். நிறையான உரத்தை நடுகைக்கு முன் மண்ணுடன் கலத்தல்.

வெப்பத்தை தாங்கும் தன்மையுள்ள வர்க்கங்களைத் தெரிவுசெய்தல் அல்லது மேலான நீர்ப்பாச்சல் (over head) செய்தல் வேண்டும். ஆனால், சிலவேளைகளில் இந்நீர்ப்பாய்சல் அங்குரப்பகுதிகளில் நோய் உருவாகுவதற்குக் காரணமாக அமைகிறது.

### 02) குறைவான எண்ணிக்கையில் காய் உருவாக்கம்.

குறைவான எண்ணிக்கையில் காய் உருவாக்கம் என்பது, குறைவான அல்லது ஒரு காயையும் உருவாக்காத தக்காளிப் பயிராகக் காணப்படும். அல்லது நல்ல வீரியமாகவும், ஆரோக்கியமாகவும் தாவரம் வளர்ந்திருக்கும். ஆனால், பழத்தை உருவாக்காது அல்லது இப்பயிரால் உருவாகும் சில காய்களும், குறை வளர்ச்சியுடையதாகக் காணப்படும்.

#### குறைவான எண்ணிக்கையில் காய் உருவாவதற்கான காரணங்கள்

முக்கியமான காரணி - வெப்பநிலை 55° F இற்குக் குறைவான அல்லது 90° F இற்குக் கூடிய வெப்பநிலை நீண்ட காலத்திற்கு காணப்பட்டால், காய் பிடிக்க முன்பு, பூ உதிருதலை ஏற்படுத்துகின்றது. இதனால், குறைவான எண்ணிக்கையில் காய் பிடிக்கிறது.

தக்காளிப்பயிரைச் சுற்றியுள்ள மண்ணிற்குக் கூடுதலான நைதரசன் பிரயோகம் செய்வதால், இலை வளர்ச்சியானது தூண்டப்படுகின்றது. பூத்தல் மற்றும் பழம் உருவாகும் செயன்முறைகள் நிறுத்தப்படுகின்றது.

நிழல் தன்மையும் குறைவான பழ உருவாக்கத்திற்கு காரணமாக அமைகின்றது. குறைந்தது ஆறு மணித்தியாலங்களாவது சூரிய ஒளி கட்டாயமாகத் தக்காளிப் பயிர்களுக்குக் கிடைக்கவேண்டும். 6 மணித்தியாலங்களுக்குக் குறைவாகச் சூரிய ஒளி கிடைத்தால், குறைவான எண்ணிக்கையில் பழம் உருவாகும்.

உலர் தன்மையான மண்ணாக இருக்கும்போது, தக்காளிப் பயிரானது போதியளவு நீரைப்பெறுவதில்லை. இதன்போது, தக்காளிப் பூக்கள் உலர்ந்து விடுகின்றன.

#### குறைவான காய் உருவாக்கத்தை தவிர்ப்பதற்கான வழிமுறைகள்

- மண்ணில் ஏற்படும் நிறைவற்ற நைதரசன் பிரச்சினையை 0-10-10 அல்லது 0-20-0 விகித பசளையை அதன் பைகளில் உள்ள ஆலோசனையின்படி பாவிப்பதன்மூலம், திருத்தியமைக்கலாம்.



- தக்காளித் தாவரங்களுக்கு ஒழுங்குமுறையான கால அட்டவணையில் நீர்ப்பாய்ச்சுதல்மூலம், மண் உலர்தன்மை அடைதலைத் தவிர்க்கலாம்.
- தக்காளித் தாவரங்களைச் சூழவுள்ள மண்ணிற்கு - வைக்கோல், கறுப்பு பிளாஸ்ரிக் அல்லது வேறு பத்திரக்கலவைப் பொருட்களைப் பாவித்தும், பத்தரக்கலவை மூலமும் தக்காளித் தாவரங்களைச் சூழவுள்ள மண்ணின் ஈரத்தன்மையைப் பேணுதல்.
- தக்காளித் தாவரங்களை அதற்குரிய சரியான காலத்தில் பயிரிடவேண்டும்.
- விதைப்பைகளிலுள்ள தக்காளி நாற்று நடுகை சம்பந்தமான ஆலோசனைகளையும் கருத்தில்கொள்ள வேண்டும்.
- நடுகைக்குத் தெரிவுசெய்யப்பட்ட இனமானது, ஏற்கனவே குறித்த இடத்தில் நடுகை செய்த இனமாக இருத்தல் வேண்டும்.

#### தக்காளிச் செய்கையின்போது ஏற்படும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தல்

**01. பூவடி அழுகலைக் கட்டுப்படுத்தல்.**

(பூக்காம்பு அழுகலைக் கட்டுப்படுத்தல்)

- பூவடி அழுகல் ஏற்படுவதற்கு அடிப்படைக்காரணமாக அமைவது - கல்சியம் பற்றாக்குறை ஆகும்.

எனவே, தக்காளிச் செய்கை பண்ணப்படும் நிலத்தில் கல்சியம் போதுமானளவு கிடைத்தலை உறுத்திப்படுத்தல் வேண்டும். இதற்குத் தக்காளி நடுகை செய்வதற்கு முன்பாக, நடுகைக்கு உத்தேசித்துள்ள தோட்டத்தின் மண்ணின் அமில, காரத்தன்மை 6.8 இற்குக் குறைவாகக் காணப்படுமாயின், தக்காளியைத் தோட்டத்தில் நாற்று நடுகை செய்வதற்கு முன்பதாக, தூளாக்கப்பட்ட சுண்ணாம்பைத் தோட்டத்தில் பரவிவிடல் வேண்டும். அல்லது நடுகைக் குழிகளில் சுண்ணாம்பை நடுகையின்போது இடல்வேண்டும்.

- நீர்ப்பாச்சுதலை ஒழுங்கு முறையில் மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம், தாவரமானது ஒரே மாதிரியான ஈரத்தன்மையைப் பெறுகின்றது. ஆனால், அதிகமான ஈரப்படுத்தலைத் தவிர்க்கவேண்டும். வேர்க்குழியின் மேல் வெட்டப்பட்ட புல் துண்டங்களைக் கூட்டுப்பசளை அல்லது களைகளற்ற வைக்கோலை இடுவதன்மூலம், மண்ணின் ஈரத்தன்மையைப் பேணலாம்.
- பூக்காம்பு அழுகல் முன்பே ஏற்பட்டிருந்தால், கல்சியம குளோரைட்டைப் பின்வரும் விதத்தில் இலைத்தொகுதிக்கு விசுறுதல் வேண்டும். ஒரு மேசைக்கரண்டி கல்சியம் குளோரைட்டை ஒரு கலன் நீரில் கலந்து, கிழமைக்கு இரண்டு அல்லது மூன்று தரம் விசிறுதல் வேண்டும். ஆனால், முழுவளர்ச்சிக்காலத்திலும் கல்சியம் குளோரைட் விசுறுதலைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில், இதனால் அங்குரத் தொகுதி பாதிக்கப்படும்.

**02) தக்காளியில் ஏற்படும் வெடிப்பைக் கட்டுப்படுத்தல்**

- எதிர்ப்புத்தன்மையுள்ள தக்காளி இனங்களை நடுகை செய்தல். உதாரணமாக றோமா, பில்கிறிம்.
- நீர்ப்பாய்ச்சுதலை ஒழுங்குமுறையாக மேற்கொள்ளுவதன்மூலம், மண்ணின் ஈரத்தன்மையை ஓரேயளவாக வளரும் காலம் முழுவதும் பேணுதல்.

**03) பூ உதிர்தலைக் கட்டுப்படுத்தல்**

- எதிர்ப்புத் தன்மையுள்ள இனங்களை நடுகை செய்தல்.
- மண்ணில் ஈரத்தன்மயை ஓரேதன்மையாகப் பேணுதல்.
- ஆரம்ப வளர்ச்சிக்காலத்தில் அதிகளவு நைதரசன் பசளைப்பாவனையைத் தவிர்த்தல்.
- பற்றீரியா வாடலும், முன்கூற்று வெளிறலும் பூ உதிர்தலைத் தோற்றுவிப்பதால், இந்த நோய்த்தாக்ங்களை அவதானிக்கவேண்டும்.

**04) எரிவைக் கட்டுப்படுத்தல்**

- சூரியனின் தாக்கத்தினால் ஏற்படும் எரிவைத் தடுப்பதற்கு, தக்காளித் தாவரங்களைக் கூடுகளில் வளர்ப்பதன் மூலம், முன்கூற்று வெளிறல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தல்.

**05) பீடைத்தாக்கம்**

பீடைத்தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள்ள மேற்கொள்ளுவதற்கு, பீடைகளை அடையாளம் காணுதல் வேண்டும்.

**01. அறுவடைக்கு பிந்திய பழ அழுகல்கள்**

தக்காளியில் பல வகையான அழுகல் நோய்கள் அவதானிக்கப்படுகின்றன.

**ANTHRACNOSE**

- பருவகாலத்தின் பிற்பகுதியில் முதிர்ச்சியடைகின்ற பழங்களில் அல்லது நன்றாக முதிர்ந்த பழங்களில் இப்பழ அலுகல் நோய் விருத்தியடைகின்றது.
- இங்கே நோய்த் தொற்றானது சிறிய விருத்தி அடைகின்ற பழங்களில் காணப்படுகின்றபோதிலும், நோய்க்குரிய அறிகுறிகள் பழம் அறுவடை செய்யப்படும் காலம்வரை வெளிக்காட்டுவதில்லை.
- அறுவடைக்குப் பின்பே அறிகுறிகள் வெளிக்காட்டப்படும்.
- அது வட்டவடிவமான, சிறிது குழிவடைந்த, கிட்டத்தட்ட அரை அங்குல விட்ட அளவான அடையாளம் மேற்பரப்பில் காணப்படும்.
- இவற்றிற்குக் கீழ் காணப்படும் உள் இழையங்கள் நிறத்தை இழந்து காணப்படும்.
- இவ்வடையாளத்தின் மையப்பகுதியில், சிறிய கருமை நிறமான வித்திகள் அவதானிக்கப்படும். இவை இப்பூஞ்சணத்தின் இனப்பெருக்க அமைப்புக்கள் ஆகும்.
- இந்த நோய் தாக்கமானது, துணையான நோய் தொற்றுக்கு உதவுவதால், இத்தொற்றலுக்குட்பட்ட பழங்களைக் களஞ்சியப்படுத்தி வைக்கமுடியாது உள்ளது.

#### நோய்க்காரணி (Colletotrichum)

இந்த நோய்க்குரிய காரணி, வித்து பிறப்பிற்குரியதாக இருப்பினும், இந்த நோய்க்காரணி தனது தகாத காலத்தை, தொற்றுதலடைந்த பிரதேசத்தில் காணப்படும் தாவர எச்சங்கள், தாவர கழிவுகளில் கழிக்கின்றது. இவையே அடுத்த ஒரு பெரும் தொற்றலுக்குரிய முக்கிய காரணியாக அமைகின்றது.

குளிர் காலநிலையும், மேற்பரப்பு நீர்ப்பாசனமும் நோய்க்காரணி பரம்பலுக்கு மேலும் வலுவூட்டுகிறது.

ஆகவே முக்கியமாக,

- ★ தூய விதை உபயோகம்.
- ★ சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை.
- ★ போதிய இடைவெளியுடன்கூடிய நடுகை.
- ★ போதிய வளி சுழற்சியை ஏற்ப்டுத்தல்.
- ★ பங்கசு. கொல்லிமூலம், இந்த நோயினை கட்டுப்படுத்தலாம்.

(தொடரும்...)

தகவல் தொடர்பு மையம். (மாணவர் பகுதி)
விவசாயபீடம். யாழ். பல்கலைக்கழகம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் | தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில் |
|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | கலாசார அலுவலர்கள் பதவிகள் (இந்து) | 1. கலை கலாசாரபீடம். பேராசிரியர் பதவி (01) புவியியல் / சமூகவியல்.<br>2. வர்த்தக முகாமைத்துவபீடம் பேராசிரியர் (01) நிதியும் கணக்கியலும் / முகாமைத்துவம்<br>3. (i) பிரயோக விஞ்ஞான பீடம் பேராசிரியர் பதவி (01) இரசாயனவியல், பௌதீகவியல்.<br>(ii) கணினி விஞ்ஞானம் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ 11 விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)<br>(iii) தற்காலிக போதனாசிரியர் மண்ணியல் விஞ்ஞானம்.<br>4. பராமரிப்பு பகுதி வேலை மேலதிகாரி (மின்சாரம்) |
| அடிப்படைத் தகுதி | கீழைத்தேய மொழிகள், இந்து நாகரிகம், இந்துசமயம், வரலாறு, மெய்யியல், தொல்பொருளியல், சமூகவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரண்டைக்கொண்ட கலைமாணிப்பட்டம் அல்லது அவற்றின் ஏதேனும் பாடத்தில் சிறப்புப் பட்டம்.<br><br>வயதெல்லை - 18 - 45 | தகுதிகள் பற்றிய விபரங்கள் விண்ணப்பப்படிவத்துடன், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். |
| விண்ணப்ப முடிவு திகதி | 21.10.2003 | 23.10.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# பக்கவிளைவுகள் ஏற்படாமல் நோயை குணப்படுத்தும் சித்த மருத்துவம்

யாழ் நகரத்தின் சத்தம், ஆரவாரங்களில் இருந்து ஒதுங்கி, கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் அமைதியான சூழ்நிலையில், பசுமையான மரங்களின் மத்தியில் அமைந்திருக்கின்றது. யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி, விற்பனவு, வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம்-



காற்றில் மிதந்து வந்த வாசனை - இது ஒரு சித்த மருத்துவத்திற்கான இடம் என்பதனைப் பறைசாற்றி நிற்கின்றது. இன்முகத்துடன் வரவேற்ற சங்கத்தின் முகாமைப்பணிப்பாளர் டொக்டர் கே.கே.ஸ்ரீகணநாதன் - சித்த மருத்துவமுறை பிரபல்யப் படுத்தப்படவேண்டும் என்பதில், மிகுந்த ஆர்வமாக இருந்ததனை அவதானிக்கமுடிந்தது.

முன்னைநாள் சுதேச மருத்துவப் பணிப்பாளர் டொக்டர் பாலசுப்பிரமணியம், கூட்டுறவு உதவி ஆணையாளர் பனை தென்னை வளம் வட் பிராந்தியம் தி.சபாரட்ணம் ஆகிய இருவரினாலேயே இச்சங்கம் 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. வடகிழக்கில் அமைந்திருக்கும் ஒரேயொரு சித்த மருத்துவ உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் இதுவாகும். வாடகைக் கட்டடத்தில் தற்சமயம் 15 பேர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

நான் சித்த மருத்துவத்துறைக்கு வந்து 20 வருடங்களாகின்றது. ஆரம்பத்தில் நம்பிக்கையீனம் இருந்தது. ஆனால், சித்த மருத்துவ வைத்தியர்களை நாடி, அனுபவத்தைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளேன் என்ற அறிமுகப்படுத்தலுடன், எம்முடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க தயாரானார் டொக்டர் கே.கே.ஸ்ரீகணநாதன்.

**சித்த மருத்துவ கூட்டுறவுச்சங்க செயற்பாடுகள் பற்றிக் கூறுவீர்களா?**

யாழ். மாவட்டத்தில் சித்த வைத்திய மருந்து உற்பத்தி மேற்கொள்வது சிரமாகவிருந்த அதேசமயம், சித்த மருந்து உற்பத்தி செய்பவர்கள் குறைந்துகொண்டே சென்றமையால், ஒரு நிறுவனம்மூலம் தரமான மருந்துகளைக் கொடுத்து, எமது பிரதேசத்தில் இதனை அழியாமல் பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்டதுதான் இந்தச் சங்கம். இதுவே எமது சங்கத்தின் குறிக்கோளும் ஆகும். அத்தோடு, மக்களுக்குச் சித்த வைத்தியம் சம்பந்தமான அறிவுகளைப் புகட்டுவது, முக்கியமாக இப்பொழுது மூலிகை வகைளின் பெயர் மாற்றிக் கொடுக்கப்படுகின்றது. அதனால், நாங்கள் சரியான மூலிகை வகைளைக் கண்டறிந்து, அவற்றை வைத்தியர்களுக்கு விநியோகிக்கின்றோம்.

வடகிழக்கில் இயங்கும் ஒரேயொரு சித்த மருத்துவக் கூட்டுறவுச் சங்கம் இது மட்டும்தான்.

கடந்த வருடம் நாங்கள் ஒரு சீர்திருத்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். தரநிர்ணய உபசபை ஒன்றை உருவாக்கியுள்ளோம். அதற்குப் பாரம்பரிய சித்த மருத்துவர்கள், அரசாங்க சித்த வைத்தியர்கள் என்று, பல தரப்பட்ட துறைகளைக் கொண்டவர்கள் 5 பேரைத் தேர்ந்தெடுத்து, தரநிர்ணயசபையில் நியமித்துள்ளோம். மருந்தியல் சம்பந்தமான மாற்றம் செய்தல், தரத்தை உறுதிப்படுத்தல், விலை நிர்ணயம் செய்தல் போன்ற அதிகாரங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்சமயம், எமது சங்கத்திற்குக் கிளைகள் இல்லை. பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்டு முன்னர் ஆரம்பித்தோம். வைத்தியர்கள்தான் மருந்துகள் பற்றி விளக்கங்களையும், நோயாளிகளைப் பரிசோதிக்கவும் முடியும். அதனால், அவைகள் தொடர்ந்தும் இயங்கமுடியாமல் போய்விட்டது.

**மூலிகை வகைகளை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்?**

எங்களால் பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொணடே மூலிகைகள் சேகரிக்கப்படுகின்றது. உள்ளூரில் உள்ள சில மூலிகை சேகரிப்பாளர்களிடமிருந்தும் கொள்வனவு செய்கின்றோம். மேலதிகமானவைகளைக் கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்கின்றோம். இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யமுடியாததாலேயே, கொழும்பிலிருந்து பெற்றுக் கொள்கின்றோம். இவற்றைக்கொண்டே 100 இற்கும் மேற்பட்ட மருந்துகள் தயாரிக்கின்றோம்.

**இந்த மூலிகைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றீர்களா?**

சில முக்கிய மருந்துக்கள் தட்டுப்பாடாகவுள்ளது. அபின் என்ற மருந்து இல்லாததால் - 2, 3 வருத்தங்களுக்குரிய, அதாவது டயரியா (வயிற்றோட்டம்) வேதனாசாந்திகளுக்குரிய மருந்துகளைச் சரியானமுறையில் தயாரிக்கமுடியாமல் இருக்கின்றது.

அபினுக்கென்று அனுமதிப் பத்திரம் உண்டு. யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கு அது விநியோகிக்கப்படவில்லை. வவுனியா, மன்னார் போன்ற இடங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

அரசாங்க அதிபர்மூலம் உருவாக்கப்பட்ட 2 வைத்தியர்களைக கொண்ட ஒரு சபை உள்ளது. ஆனால், அது இயங்குவதாகத் தெரியவில்லை. யாருடைய குறைபாடு என்று எங்களால் சொல்ல முடியாமல் இருக்கின்றது. இதனைச் சீர்செய்தால் நன்றாக இருக்கும். இதற்கு அரசாங்க அதிபர்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தது கஞ்சா - உள்ளூரில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், நாங்கள் அதனைச் சேகரித்து வைத்திருப்பது சட்டப்படி குற்றம். நாம் கஞ்சாவைக் களஞ்சியப்படுத்தவேண்டி இருப்பதால், சட்ட நடைமுறையொன்று இதற்கு அவசியம்.

**சித்த மருத்துவத்திலுள்ள நன்மைகளை மக்கள் புரிந்து கொள்ளத் தயங்குவது ஏன்?**

சித்த மருத்துவத்தில் - நோய் நீண்டகாலத்திலேயே பூரணகுணமடையக்கூடிய வாய்ப்பு உண்டு.

ஏனெனில், இது இயற்கை மருத்துவம். இயற்கை என்றால், நாம் உண்ணும் உணவு போன்றது. இயற்கையாகக் கிடைக்கும் பொருள் - இரசாயனப் பொருள் அல்ல. அவற்றை நாங்கள் கொடுக்கும்போது, நோய் குணமாகக் காலதாமதமெடுக்கும். ஆங்கில மருத்துவத்தில் இன்சுலினை நேரடியாக ஏற்றுகின்றார்கள். ஆனால், நாங்கள் இன்சுலின் சுரப்பைத் தூண்டக்கூடிய சதையி எனப்படும் மருந்தைக் கொடுக்கின்றோம்.

எங்களுடைய மருந்துகள் நோயைச் பூரணமாகச் சீர்செய்கிறது. அதனால், காலதாமதமாகின்றது. ஆனால், ஆங்கில மருந்துகள் நேரடியாகப் பயன்படுவது. இதனாலேயே, மக்கள் ஆங்கில மருந்தை நாடுகின்றனர். அத்துடன், அவைகள் உடனடியாக உட்கொள்ளக்கூடியவை.

நாங்கள் கரைத்துக்குடிக்கச் சொல்கின்றோம். அத்துடன், அதில் கைப்புச் சுவையும் இருக்கின்றது. ஆனால், தற்சமயம் சித்தமருத்துவ நடமாடும் சேவையில் பலர் ஆர்வமாகக் கலந்துகொள்வதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

**நடமாடும் சேவை பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?**

இந்தக் கூட்டுறவுச்சங்கம் - பனை, தென்னைவள அபிவிருத்தச் சங்கத்தின் மூலதனத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த மூலதனத்திற்கு அவர்களே பங்காளிகள். சங்கங்கள் தம்முடைய அங்கத்தவர்களுக்கு அந்தப் பணத்திலிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்து, எமது சங்க வைத்திய அதிகாரியூடாக, நடமாடும் சேவையில் மக்களுக்கு வைத்தியத்தைப் பெற்றுக் கொடுக்கின்றார்கள். மக்களைச் சென்றடையவேண்டும் என்பதற்காக, குறைந்த செலவில் மருத்துவம் செய்கின்றோம்.

இதன்மூலம், எமக்கான மருந்துச் செலவை மட்டும் பெறுகின்றோம். உண்மையில், எமது சங்கத்திற்கு இலாபம் குறைவு. அதற்காகப் பக்கபொருளாகப் பற்பொடி தயாரிக்கின்றோம். அது சங்கத்தின் நட்டத்தைப் பாதுகாக்கிறது.

அத்துடன், சித்த மருத்துவர்கள் - ஆங்கில மருந்துகள் பாவிக்கமுடியாது என்றநிலை வந்தபிறகு, எங்களிடம் நிறையக் கொள்வனவுகளை மேற்கொள்கின்றனர்.

**பெரும்பான்மையாகப் பெரியவர்களைவிட, சிறுவர்கள், குழந்தைகளே சித்த மருத்துவத்தைப் பெறுகின்றார்கள். இதற்கான காரணம் யாது?**

இதற்கு நிறையக் காரணம் இருக்கின்றது. குழந்தைகளுக்குத் தாய்ப்பாலும், எமது கோரோசனை மாத்திரையும், கிரந்தி எண்ணைய்யும் சரியானமுறையில் ஆறு மாதத்திற்குப் பாவித்துக்கொண்டு வந்தால், எந்த ஒரு வைத்தியசாலைகளுக்கும் செல்லவேண்டிய நிலைமை ஏற்படாது. பின்னர் உணவு உண்ண, தவழ ஆரம்பிக்கும் போது, வேறு சிக்கல்கள் ஏற்படவாய்ப்புண்டு.

சகல நோய்களையும் கட்டுப்படுத்தக்கூடிய தன்மை கோரோசனைக்கு உண்டு. சமிபாட்டுப் பிரச்சினை, வயிற்றுப் போக்கு, சளி, சிறுநீர் கழிப்பதில் ஏற்படும் பிரச்சினை போன்றவற்றிற்கு இவை உபயோகப்படுகின்றது. இதனால்தான், உடனடியாகச் சித்தமருத்துவத்திற்குக் குழந்தைகளை அழைத்துச்செல்ல தாய்மார்கள் விரும்புகிறார்கள்.

பெரியவர்கள் வராமைக்குக் காரணம் - மருந்து விழுங்கும் பிரச்சினையும், அனுமானங்களைத் தேடும் பிரச்சினையும் ஆகும்.

அதனால், தற்பொழுது அனுமானங்களைப் பாணியாகச் செய்தால், மக்களை இலகுவாகச் சென்றடையும் என்பதால், அந்த முயற்சியில் இறங்கியுள்ளோம். ஆங்கில மருத்துவத்திற்கு ஒத்ததாக இருக்கும் என்பதால், வெகுசீக்கிரத்தில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

**ஆங்கில மருத்துவம் மூலம் குணப்படுத்த முடியாத சில நோய்களை, சித்த மருத்துவம்மூலம் குணப்படுத்தி இருப்பீர்கள். சிலவற்றைக் கூறமுடியுமா?**

நிறைய சம்பவங்கள் உண்டு. ஆங்கில மருத்துவம் நோய்களின் உபாதையை குறைக்கின்றது. உதாரணமாக- பனடோல், பரசிற்றமோல் போன்றவைகள் கொடுத்தால், அது நோயைக் குறைக்கும். அதேசமயம் பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். ஆனால், எங்களுடைய எண்ணை, மருந்து வகைகளும், ஒத்தடங்களும் - நோயின் தன்மையை இல்லாதொழிக்கின்றது. பக்கவிளைவுகள் இல்லாதது.

உதாரணமாக வாதரோகம் - மூட்டில் கிறீஸ் போன்ற சுரப்பு இல்லாததால் ஏற்படுகின்றது. நாங்கள் எண்ணை போட்டு, மசாஜ் செய்து, ஒத்தடம் கொடுக்கும்போது, அது தானாக இயங்கத்தொடங்கி, நோயாளி பூரண சுகமடைகிறார். பக்கவாதம், ஒற்றைத் தலைவலி, சருமரோகங்கள், அல்சர் போன்றவைகள் எமது சித்த மருத்துவத்தின் மூலம் பூரணகுணமடையமுடியும்.

**ஆங்கில மருத்துவத்திற்கு விளம்பரங்கள் உண்டு. சித்த மருத்துவத்திற்கு விளம்பரங்கள் குறைவு. மக்களைச் சென்றடைவதும் குறைவு. இதற்கான காரணம் யாது?**

வைத்தியர்களாகிய நாங்கள்தான் முக்கிய காரணம். நாங்கள்தான் பொறுப்பு ஏற்கவேண்டும். ஏனென்றால், நான் கூட ஒரு நோய்க்குப் புதிதாக மருந்து கண்டுபிடித்தால், அதைப் பிரபல்யப்படுத்துவதில்லை. இதற்குப் பாரம்பரிய முறைகளை வெளிப்படுத்தமுடியாததும், வருமானக்குறைவும்தான் காரணம். ஆனால், ஆங்கில மருத்துவத்தில் ஒன்றைக் கண்டுபிடித்தால், அதற்குரிய பெறுமதி வழங்கப்படுகிறது. எங்களுக்கு ஊக்குவிப்புக்கள் இல்லை. சிரமங்களுக்கு மத்தியில் கண்டுபிடிக்கும் மருந்துகளைப் பரிசோதனை செய்து, மக்களுக்கு விநியோகித்தால் நன்மை பயக்கும். அதற்கென்று எமக்கு ஒரு பொறுப்பான அமைப்பு இல்லை. அது பெரிய குறைபாடு. பாரம்பரிய வைத்தியர்கள் ஒன்று சேர்ந்து, தங்களுடைய உரிமைகளை வெளிக்கொணர வேண்டும்.

அத்துடன், ஊடகங்கள் மூலம் மூலிகைகள் பற்றிய தகவல்களை மக்கள் அறியும்படியாக வெளியிட்டு வந்தால் அவை பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு மக்கள் அவற்றை அழியவிடமாட்டார்கள்.

**இறுதியாக நீங்கள் கூற விரும்புவது என்ன?**

இந்த கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் - எதிர்காலத்தில் சித்த மருத்துவம் அருகிப்போய் விடக்கூடாது என்பதற்காகத்தான். சிங்கள பிரதேசங்களில் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் இருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் மிகமிகக் குறைவு. அத்துடன், கலப்படமும் நடைபெறுகின்றது. நல்லதொரு தரமான சேவையை வழங்கக்கூடிய சித்த மருந்துகள் உற்பத்தி நிறுவனம் ஒன்றினை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால்தான், நான் இதில் இணைந்துள்ளேன். எமக்கு ஒரு நிரந்தரக் கட்டிடம் தேவை. பெரியளவில் சேவையை வழங்குவதற்குத் அது உதவியாக அமையும்.

தமிழர்களுடைய பண்பாட்டை, கலாசாரத்தை எப்படி அழிக்கமுடியாதோ, அப்படித்தான் சித்த மருத்துவமும். இது சித்தர்களால் உருவாக்கப்பட்ட ஒரு வைத்தியமுறை. சைவ சமயத்திற்கும், சித்த மருத்துவத்திற்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் உண்டு. சித்த வைத்தியர்களால் இது பாதுகாக்கப்படும் என்பது என்னுடைய நம்பிக்கை என்று தெரிவித்து, தனது செவ்வியை நிறைவு செய்தார் சித்த மருத்துவ உற்பத்திக் கூட்டுறவுச்சங்க முகாமைப் பணிப்பாளர். ★

*இரா.சுபோதினி, இரா.காயத்திரி*

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 40/= | 50/= | 50/= | 50/= | 40/= |
| வெண்டிக்காய் | 15/= | 30/= | 30/= | 20/= | 40/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 80/= | 60/= | 70/= | 60/= | 60/= |
| கத்தரிக்காய் | 40/= | 35/= | 50/= | 40/= | 50/= | 30/= |
| பாகற்காய் | 60/= | 60/= | 60/= | 70/= | 50/= | 50/= |
| கரட் | 30/= | 30/= | 50/= | 40/= | 50/= | 50/= |
| பீற்றூட் | 15/= | 20/= | 35/= | 20/= | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 80/= | 80/= | 150/= | 40/= | 100/= | 60/= |
| வெங்காயம் | 40/= | 40/= | 30/= | 30/= | 28/= | 35/= |
| பச்சை மிளகாய் | 50/= | 50/= | 60/= | 50/= | 40/= | 30/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.
-திருக்குறள்.

## நமது நோக்கு

### சிறுமை கண்டு பொங்கும் மக்கள்

யாழ்ப்பாண நகரில் ஒரு வாரத்தில் இரண்டு விபத்துச் சம்பவங்கள் அரச படையினரின் வாகனங்களால் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவது சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தது.

பிரதான வீதி தண்ணீர்த் தாங்கியடியில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் இரண்டு பொதுமக்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இதன் பின்னர், விபத்து நடந்த இடத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்துகொண்ட விதம் பொதுமக்களை ஆத்திரமடையவைத்தது.

சம்பவ இடத்திலிருந்து இராணுவ வாகனத்தை அப்புறப்படுத்த முற்பட்டபோது - ஆத்திரமடைந்த பொதுமக்கள், இராணுவத்தினர் மீதும் அருகிலிருந்த இராணுவ காவலரண்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தனர். கற்களாலும், போத்தல்களாலும் பொதுமக்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பின்னர் அப்பகுதியில் மேலதிக படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களும், தடியடி, கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சுக்களும் பொதுமக்களின் ஆத்திரத்தினை அதிகரித்தன.

இதன் தொடர்ச்சியாக - மறுநாளும் தண்ணீர்த் தாங்கியடி மற்றும் கோண்டாவில் பகுதியிலும் பொதுமக்களின் ஆர்ப்பாட்டம் மற்றும் மறியற் போராட்டம் இடம்பெற்றதுடன், படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களும் இடம்பெற்றிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதி விசாரணைகள் நடத்தப்பட்டுவரும் அதேவேளை, மீண்டும் ஒரு விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமுற்றார்.

ஒற்றை விளக்கு வெளிச்சத்துடன், அங்குமிங்குமாக தடுமாறித் தடுமாறி வந்த ட்ரக் வண்டியே, மோட்டார் சைக்கிள் மீது மோதியதாகச் சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

கடற்படையினரின் ட்ரக் வண்டி மோதியதில், மோட்டார் சைக்கிளில் வந்தவர் காயமுற்றதையடுத்து அப்பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளையும் கடற்படை வாகனத்தையும் படையினர் அகற்ற முற்பட்டபோது, மீண்டும் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இதன்போதும் - தடியடி, கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு என்று பொதுமக்கள் மீது அராஜகமாக நடவடிக்கைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. பொலிஸாரும் கடற்படையினரும், இராணுவத்தினரும் தம் இஷ்டப்படி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவது அதிகாரத்தனமானது.

இந்த இரண்டு சம்பவங்களின் போதும், பொதுமக்கள் ஆயுதம் தாங்கிய படையினருக்கு எதிராக - துணிந்து நின்று கற்களாலும் போத்தல்களாலும் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். இந்தச் சம்பவங்களில் பல பொலிஸாரும், படையினரும் காயமடைந்துமுள்ளனர்.

பொலிஸார் மற்றும் படையினர் மீது பொதுமக்கள் தாக்குதல்களை நடத்துகின்ற அளவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தும் வகையில் படையினரின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

குடாநாட்டு வீதிகளில், படையினரின் வாகனங்கள் அதிவேகத்தில் செலுத்தப்படுவதால், பொதுமக்கள் கொல்லப்படுவது, காயப்படுவதென்பது இதுதான் முதல் தடவையல்ல. கடந்த காலங்களிலும் எத்தனையோ சம்பவங்கள் இவ்வாறு நிகழ்ந்திருக்கின்றன.

ஆனால், இத்தகைய விபத்துக்களைத் தடுத்து நிறுத்த பொலிஸாரோ அல்லது சம்பந்தப்பட்ட படையதிகாரிகளோ நடவடிக்கை எடுக்கவில்லை. குடாநாட்டு வீதிகளில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி இராணுவ வாகனங்களைச் செலுத்துகின்ற நடைமுறைகளில் மாற்றம் வந்ததாகத் தெரியவில்லை.

இத்தகைய அத்துமீறிய சம்பவங்கள்தான் மக்களை ஆத்திரமடைய வைத்திருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் மேலும் பல விடயங்களை படைத்தரப்புக்கு எடுத்துச் சொல்லியது. அதில் படையினர் என்றாலென்ன, தமது உரிமைகள் மறுக்கப்படும் போது கல்லோடும் போராடத் தயார் என்பதை மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்த நிலை முக்கியமானதொரு மாற்றமாகும். படையினருக்கெதிராக மக்கள் போராட்டம் பரிணமிக்க இத்தகைய விபத்துக்கள் காரணமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்தால் விடுதலைப் புலிகளுடன் ஜே.வி.பி பேச்சு நடத்தும்!

## மங்கள சமரவீர கூறுகிறார்

சுதந்திரக் கட்சியுடன் மீளவும் இணக்கப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியைப் பிடித்தால், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த ஜே.வி.பி. முடிவெடுப்பதாக பொ.ஐ. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுக்கள் - தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்தபோதிலும், இந்தப் பிரச்சினைத் தீர்வு முயற்சி தொடர்பாக ஏற்பட்ட இழுபறிநிலையை அடுத்து, பேச்சுக்கள் முறிவடைந்திருந்தன.

இதையடுத்து ஜே.வி.பியும், சுதந்திரக்கட்சியும் தனித்தனியாக தேர்தல்களை எதிர்கொள்வதற்கேற்ற முறையில் தம்மைத் தயார்படுத்தி வந்தன.

எனினும், அண்மையில் நடந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில், ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது குறித்து உத்தியோகப்பற்றற்ற முறையில் பேச்சுக்களை நடத்த முடிவுசெய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து, இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி குறித்த பேச்சுக்கள், இரகசியமாக ஆரம்பமாகியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதையடுத்தே, இரு கட்சிகளுக்கும் இடையில் கூட்டணி அமைக்கப்பட்டு, ஆட்சி அமைக்கப்படும் சூழ்நிலை உருவானால், புலிகளுடன் பேச்சு நடத்த ஜே.வி.பி முடிவுசெய்திருப்பதாக மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

ஜே.வி.பி - புலிகளுடன் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்துள்ளது குறித்து, சிங்கள தேசிய வாதிகள் மற்றும் பௌத்த பீடாதிபதிகள் மத்தியில் அதிருப்தி தோன்றியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தீவிபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு அடிப்படை நிவாரண உதவிகள்

மன்னார் - பேசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தினால் பாதிப்புற்றவர்களுக்கு என - மன்னார் வாழ்வோதயம், துயர்துடைப்புச் சங்கம் மற்றும் மன்னார் மாவட்ட அரசியல் துறையினர் - மக்களுக்கு வேண்டிய அடிப்படை நிவாரண உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் - வங்காலைப் பகுதியைச் சேர்ந்த மக்களாலும், 32 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்குச் சமைத்த உணவு வழங்கிவருகின்றனர். இந்தத் தீ விபத்தினால் பல இலட்சக்கணக்கான சொத்துக்கள் இழக்கப்பட்டு, இருப்பிடங்கள் தீக்கிரையானதும் தெரிந்ததே.

## மீன்பிடி வாடி தீப்பற்றியதால் குடும்பஸ்தர் பரிதாப மரணம்!

மீன்பிடி வாடி தீப்பற்றியதால், பலத்த காயத்துக்குள்ளாகியிருந்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். கடந்த வியாழக்கிழமை தாளையடி பகுதியிலுள்ள மீன்பிடி வாடியில் இருந்தவேளை, வாடி தீப்பற்றி எரிந்ததில், அதனுள் இருந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான மரியதாஸ் குலாஸ் என்ற குடும்பஸ்தர் தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

பலத்த எரிகாயங்களுக்குள்ளான நிலையில், இந்த நபரை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துப் பின்னர், யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்தார். அங்கும் சிகிச்சை பலனளிக்காதநிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

# வாடிக்கையாளரின் தேவைகளை நிறைவேற்ற உலக அஞ்சல் சேவையாளருடன் ஒன்றிணைவோம்

உலகம் பூராவும் பரந்திருக்கும் 6.2 மில்லியன் அஞ்சல் தொழிலாளருடன், நாமும் கைகோர்த்து வாடிக்கையாளர்களின் தேவைகளை இனங்கண்டு, அவற்றை வழங்குவதோடு மட்டுமன்றி, சகல சவால்களுக்கும் முகங்கொடுக்கவேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு சகலரும் தமது பங்களிப்பை வழங்குதல் வேண்டும் என, உலக தபால் தினத்தை முன்னிட்டு பிரதி அஞ்சல் மா அதிபர் என்.ஜெயரத்தினம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

உலக அஞ்சல் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட தினமாகிய ஒக்டோபர் 9 (1874) அன்றே, உலக தபால்தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த உலக அஞ்சல் சங்கம் மூலமாக, அதன் 189 அங்கத்துவ நாடுகளுக்கான சர்வதேச சட்டங்கள் ஸ்தாபிதம் செய்யப்பட்டன. கடந்த 128 வருடங்களாகத் தொழிலநுட்பரீதியான தரமான வாடிக்கையாளர்கள் சேவை, உலகம் பூராவிலும் மாபெரும் பாய்ச்சலாக அமைந்திருப்பினும், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று,, மணியடித்து கடிதம் விநியோகஞ் செய்யும்முறை தொடர்ந்தும் வெற்றிகரமாகச் செயற்பட்டுக் கொணடு வருகின்றது. கணிப்பீட்டாளர்களின் தகவலின பிரகாரம்-உலகளாவியரீதியில் வருடாந்தம் கடிதம் பெட்டியிலிடப்படுவது இரண்டு விழுக்காடு அதிகரித்து கொண்டே வருகிறது. இதற்கான இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவது தபால் மிகவும் மலிவானதும், நம்பிக்கையானதாகவுமுள்ளது. இரண்டாவதாக - உச்ச ரகசியம் அதில் பேணப்படுகின்றது.

உலகளாவிய 6800 மொழிகளின்மூலம் விநியோகஞ் செய்யப்படும் தபாற்சேவை தொடர்பாடலை கடிதம் தவிர்ந்து - புத்தகம், பத்திரிகை, சஞ்சிகைகள், பதிவுசெய்யப்பட்ட செய்திகள்மூலம் கையாள்கிறது. இம்முறையானது தமது வாடிக்கையாளரது கலாசார, சமூக, விழுமியங்களின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்குகிறது. எனவே, அஞ்சலர் மூலம் விநியோகிக்கப்படும் தபாலுக்கு மாற்றீடு கிடையாது. அதுமட்டுமல்ல, அதைக் குறைத்து மதிப்பீடு செய்யவும்முடியாது.

அஞ்சல் - சகலரும் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. "வாடிக்கையாளரை குதூகலப் படுத்தும்" எமது திட்டம் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லப்படுகிறது. ஏழை, பணக்கார நாடுகளிடையே நிலவும் வித்தியாசங்கள் காரணமாக, ஏழை நாடுகள் அஞ்சலரால் விநியோகிக்கப்படும் தபாற்சேவையிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கின்றன. தபாற்சேவையை - செய்தி எண்ணப்பரிமாற்றம், கல்விசார் விடயங்கள், இலக்கியம், ஓவியம் போன்றன மக்களினதும் நாடுகளினதும் கலாசார, சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக உருவாகுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதயாத்திரையில் பங்குபற்றியோர் மீது சந்திரிகா ஒழுங்காற்று நடவடிக்கை

தேசப்பற்று முன்னணி நடத்திய ஐந்து நாள் பாதயாத்திரையில பங்கு பற்றிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, ஒழுங்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஜே.வி.பியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பாதயாத்திரையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொகுதி அமைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, திலின பண்டார தென்னக்கோன் ஆகியோர் இந்தப் பாதயாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கும் வருவார்?

இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ஜஸ்வந் சின்ஹா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாண விஜயத்தின் போது - பல்கலைக் கழகம், மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கும் அமைச்சர் விஜயம் செய்வார் எனத் தெரியவருகின்றது.

யாழ். பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றிற்கு சில முக்கிய உபகரணங்களையும் ஜஸ்வந் சின்ஹா வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனும் பேச்சுவார்த்தை நடாத்துவாரென அறியப்படுகிறது.

## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சமஷ்டி பற்றி ஆராய பிரிட்டனுக்கு!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியலமைப்பு சபையைச் சேர்ந்த 11 பேர் சமஷ்டி அமைப்பு குறித்து ஆராயப் பிரிட்டனுக்குச் செல்லவுள்ளனர்.

சமஷ்டி அமைப்புமுறை மற்றும் அதிகாரப் பரவலாக்கம் குறித்து, பிரிட்டனின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, இந்தக் குழுவினர் ஆய்வுகளை மேற்கொள்ளவிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஹசன் அலி, எம்.எல்.காதர், ஏ.எம்.நௌசத், வை.எல். எஸ்.ஹமீட், நிசாம் காலியப்பர், எம்.இசட்.எம்.மொகைதீன், எம்.எச்.எம். சல்மான், ஏ.எம் பாயிஸ், ஷிப்ளி கஸீஸ், ஜெயம்பதி விக்கிரமரத்ன ஆகியோரே லண்டனுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்கள் லண்டனில் பல்வேறு அரசியலமைப்பு நிபுணர்களையும சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியா - பூந்தோட்டத்தில்

## ஆபாசப்படம் பார்த்த ஏழு இளைஞர் கைது!

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் ஆபாசப் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்த ஏழு இளைஞர்கள், விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

விடுதலைப்புலிகளின் அரசியற் துறையினருக்கு கொடுக்கப்பட்ட தகவல்களை அடுத்து இந்த ஏழு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

நீண்ட நாட்களாகவே இந்த ஏழு இளைஞர்களும் ஆபாசப் படங்களைப் பார்த்து வருவதாகவும், அண்மையில் இரண்டு பெண்களை அழைத்து வந்து அதே வீட்டில் உல்லாசமாக இந்த ஏழு இளைஞர்களும் இருந்ததாகவும், விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல்துறைக்கு தகவல் கிடைத்ததையடுத்து, விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மேற்கொண்ட நடவடிக்கையால் இந்த இளைஞர்கள் கைதாகியுள்ளனர்.

கைதான ஏழு இளைஞர்களும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை - வவுனியா மாவட்டத்தில் கலாசார சீரழிவு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (03)

# இலங்கைத்தீவில் இரண்டு அரசுகள்

அண்மைக்காலமாக தென்னிலங்கை அரசியலரங்கில் கொதிநிலையில் இருக்கும் விடயம் - சமாதானம் என்ற பெயரில், அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கப்போகின்றது என்பதாகவே இருக்கிறது.

சமாதான முயற்சிகளின் ஆரம்பம் முதலே, அதற்கு எதிர்ப்புக் காட்டிவந்த சக்திகள், தற்போது அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக சபை வரைபுகுறித்த புலிகளின் மாற்று யோசனைகள் வெளியிடப்படவிருக்கின்ற சமயத்தில், இந்த எதிர்ப்பை அதிகமாகத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தேசாபிமான தேசிய முன்னணி என்ற பெயரில், அணிதிரண்ட ஜே.வி.பி. தலைமையிலான அரசியல் கட்சிகள், செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதிமுதல், இம்மாதம் முதலாம் திகதிவரை கண்டியிலிருந்து கொழும்புக்குப் பாதயாத்திரையாக வந்து, மீண்டும் ஒருமுறை தமது எதிர்ப்பையும், அதற்கிருக்கும் பலத்தையும் காட்ட முனைந்திருக்கிறார்கள்.

ஜே.வி.பி.யும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து தூண்டிவிடும் இத்தகைய எதிர்ப்பலைகள் - சமாதானத்துக்கு எதிரான சதி எனவும், நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்வது எனவும், ஐக்கிய தேசிய முன்னணியினர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

ஆனால், யதார்த்தநிலை என்னவெனில், இவர்கள் சொல்வதிலும் ஓரளவு உண்மை இருககிறது என்பதுதான். அவர்கள் என்ன சொல்கிறார்கள்?.

அதிகளவு அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாகசபை என்பதன்மூலம், வடக்கு-கிழக்கில் தனியானதொரு அரசு உருவாகி விடப்போகிறது என்பதுதான் அவர்கள் வெளிப்படுத்தும் அச்சம். அவர்கள் சொல்வது முழு அர்த்தத்தில் சரியாக இல்லாவிட்டாலும், அது முற்றுமுழுதாகப் பொய்யென்றும் சொல்லிவிட

## யதார்த்தத்தை மறுக்க முடியுமா?

முடியாது.

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், தங்களுடைய பாரம்பரியத் தாயகப் பிரதேசத்தில், தம்மைத்தாமே ஆளும் சுயநிர்ணய உரிமையைத்தான் கேட்கிறார்கள் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாத ஒன்று.

இது சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே வலியுறுத்தப்பட்டுவிட்ட விடயம். 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒஸ்லோவில் எட்டப்பட்ட இறுதித்தீர்வு தொடர்பான உடன்பாட்டிலும் இது தெளிவாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இடைக்கால நிர்வாகசபை என்பது, இத்தகைய ஒரு இறுதித் தீர்வுக்கான ஒரு முன்வரைபு அல்லது இறுதித்தீர்வு எட்டப்படும் வரையிலான ஒரு இடைக்கால அரசு. ஆக - ஜே.வி.பி.யும் தேசாபிமான தேசிய முன்னணி என்ற பெயரில் அணிதிரண்டிருக்கும் சக்திகள் முன்வைக்கும் கருத்துக்களில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

இது நாட்டைப் பிரிப்பதற்கான முயற்சி அல்ல என்று வாதிடுவதானாலும், தமிழ் மக்களுக்கு தனியான அதிகாரம் கொண்ட ஆட்சியலகு வழங்கப்படவேண்டும் என்பதுதான் யதார்த்தநிலை. இப்போது தேவைப்படுவதெல்லாம் - ஆம், உண்மை. தமிழர்களுடைய உரிமைகளைக் காலம் காலமாக மறுத்துவந்த நாம், அவர்களுக்கு இப்போது இந்த உரிமைகளை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை இந்தத் தேசாபிமானிகளுக்கு முகத்துக்குநேரே சொல்வதுதான். அதைவிடுத்து, இவர்கள் சமாதானத்தைக் குழப்பமுனைகிறார்கள் என்று சமாளிக்க முனைவதானது, சிங்கள மக்களுக்கு யதார்த்த நிலையை மறைக்கும் ஒரு செயலாகவே இருக்கப்போகிறது.

சிங்கள மக்களுக்கு யதார்த்தத்தை இப்போது வெளிப்படுத்தினால், ஆட்சியைத் தக்கவைப்பதும், தொடர்ந்து சமாதான முயற்சியை முன்னெடுப்பதும் சிரமமான காரியம் என, ஐக்கிய தேசிய முன்னணி அரசு கருதலாம். அதுமட்டுமன்றி, அதைத் தவறான முறையில் அரசியல் செய்து, ஜே.வி.பி. போன்ற சக்திகளும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும், நாட்டில் அரசியற்கொந்தளிப்பை ஏற்படுத்த முனையலாம் என்றும் அஞ்சப்படலாம். அப்படியானால், சிங்கள மக்கள் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளப் போவது எப்போது?.

இது ஒன்றும் தமிழ் மக்களுக்கு ஆட்சியதிகாரம் வழங்கும் விடயமல்ல, நமது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் செயற்பாடே என்றேயாகிறது. சர்வதேச வரைபடத்தில் தனியான ஆட்சியதிகார இறைமையுடைய ஒரு அரசாகக் காணப்படுகின்ற சிறிலங்கா என்கின்ற நாட்டின், ஆட்சியதிகார எல்லைப் பரப்பிற்குள், 'தமிழீழ விடுதலைப் புலிகளுடைய ஆட்சியதிகார எல்லை என ஒன்றிருப்பதை, போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் சிறிலங்கா அரசே ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

இத்தகைய ஒரு உடன்படிக்கை சர்வதேச அனுசரணையாளர்களின் முன்னிலையிலேயே செய்யப்பட்டு, அதற்குச் சர்வதேச ஆதரவும் பெறப்பட்டிருக்கின்றது. ஆக, இது சர்வதேசளவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட விடயம். இவற்றுக்கு மேலதிகமாக, இந்த இரண்டு ஆட்சியதிகாரக் கட்டுப்பாட்டு எல்லைகள் தொடர்பாகவும், அந்த எல்லைகளிடையே செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் மீறல்கள் தொடர்பாகவும் முறைப்பாடு செய்யவும், அவற்றைக் கையாளவும் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம், சர்வதேச நோக்கில்



இது என்பதுபோல பேசிவந்தால், இறுதியில் உண்மையான ஒரு தீர்வு எட்டப்படும்போது, அது சிங்கள மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தாதா?.

2002 ஆம் ஆண்டு நோர்வே மத்தியஸ்தத்துடன் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை, இந்தத் தீவில் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப்பகுதி என ஒன்று இருப்பதைத் தெளிவாக ஏற்றுக்கொள்கிறது.

இத்தகைய ஒரு உடன்படிக்கையில் சிறிலங்கா அரசு கையெழுத்திட்டிருப்பதானது, அதனை சிறிலங்கா அரசும் ஏற்றுக்கொள்கிறது சிறிலங்காவின் ஆட்சிப்பரப்பெல்லைகளும், அவற்றின் மீதான அதிகாரங்களும் இரு வெவ்வேறான சக்திகளிடம் இருக்கின்றது என்பது அங்கீகரிக்கப்பட்டுளளது. உடன்படிக்கையில்.

ஏற்றுக்கொள்ளப்பட்டபடி, அந்தச் சக்திகளில் ஒன்று சிறிலங்கா அரசாங்கம். மற்றையது தமிழீழ விடுதலைப் புலிகள். ஆனால், இவ்வளவும் சிறிலங்கா என்ற தேசத்தினுடைய அரசியலமைப்பின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டே செய்யப்பட்டுள்ளது.

இப்போது செய்யப்பட வேண்டியிருப்பதெல்லாம், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட இந்த இரு ஆட்சியதிகார எல்லைகளுக்கும் இடையே, அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான ஒரு உள்நாட்டு உடன்பாட்டுக்கு வருவதுதான். சர்வதேச அளவில் அறியப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டும் விட்ட இந்த விடயத்தை சிங்கள மக்கள் இன்னமும் அறிந்துகொள்ளாமல் செய்யப்பட்டிருப்பதுதான் துயரம்.

இது தகவல்களை அறிந்து கொள்வதற்கான அவர்களது உரிமையை மறுக்கின்ற ஒரு செயலும்கூட.

அந்த உண்மைகளை ஜே.வி.பி. போன்ற அரசியல் கட்சிகளின் அரசியல் சித்து விளையாட்டுக்கள் மூலமும், எதிர்ப்புப் போராட்டங்களின்மூலம் சிங்கள மக்கள் அறிந்து கொள்ளுமாறு விடப்படுவதால், சிங்கள மக்கள் இன்னமும் யதார்த்தத்திலிருந்து தூரவைக்கப்படுகிறார்கள்.

ஐம்பது வருடங்களுக்கும் மேலாக உரிமைகள் மறுக்கப்பட்டு, மோசமான இராணுவ நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த ஈழத்தமிழர்களுக்கு இந்த உரிமையை இனி மறுக்கமுடியாது என்கின்ற யதார்த்தத்தை புரிந்துகொண்டே ஆக வேண்டும்.


குண்டுகள் போட்டு அழிக்கப்பட்டபோது, தமது தேசத்தின் ஒரு பகுதியாகத் தெரியாத வடக்கையும், கிழக்கையும் பற்றி இப்போது கவலைப்படுவது வெறும் போலிக்கூத்து என்பதை இவர்கள் புரிந்துகொள்ளச் செய்ய வேண்டும்.

அதுவே நிரந்தர தீர்வுக்கான பாதையை கரடுமுரடற்றதாக மாற்ற உதவும்.

**அதியமான்**

# ஒருவரின் மனதை அறியும் அற்புதமான தபாற் சேவை!

இன்று உலகில் உலக தபால் தினம் கொண்டாடப்படுகின்றது. ஒருவருடைய மனதை ஒருவர் அறியும் அற்புதமான சேவை தபாற்சேவை. உலக மக்களின் நாளாந்த வாழ்க்



கையில், தபாற்சேவை இன்றியமையாத ஒரு அங்கமாகிவிட்டது. அஞ்சல் சேவையானது, இரகசியத்தை பாதுகாக்கும் ஒரு தொடர்பாடல் முறையாகும். அதுமட்டுமல்ல, அஞ்சல் குறைந்த செலவில் எல்லா மக்களையும் சென்றடைகின்றது. அஞ்சல் சேவையானது - சாதி, மதம், அந்தஸ்து எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு, சீரானமுறையில் செயற்படுகின்றது. ஏழை என்பதற்காக ஒருவருடைய தபாற்சேவை மறுக்கப்படுவதில்லை.

அகில தேச அஞ்சல் தினம் எப்படித் தோன்றியது? வட ஜேர்மனியில் தபால் நிர்வாகத்தில் உயர் பதவி வகித்த ஹென்றிச் வோன் ஸ்டீபன் (**Henrich Von Stephen**) என்பவர் தான் உலக அஞ்சல் ஒன்றியம் என்ற கருத்தை வித்திட்டவராவார்.

1874 ஆம் ஆண்டு - செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி பேர்ன் நகரில் அஞ்சல் பற்றி ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இதில், 22 நாடுகள் பங்குபற்றின. அஞ்சல் விடயங்கள் சம்பந்தமாக, உலக நாடுகளிடையே பொது உடன்பாடு உருவானது. அதன்படி ஒக்ரோபர் 9 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அகில அஞ்சல் சங்கத்தில் -

**1) காங்கிரஸ் - அதியுயர் அதிகார சபை (Congress).**

**2) நிருவாக சபை - தெரிவு செய்யப்பட்ட 40 உறுப்பினர்களைக் கொண்ட சபை.**

**3) அஞ்சல் நடைமுறைகள் சபை. 35 உறுப்பினர்களைக் கொண்ட இச் சபை 5 வருடம் செயற்படும்.**

ஆகிய அம்சங்கள் உண்டு. இவை யாவும் நிர்வாகத்தைச் சீர்பட நடைமுறைப்படுத்தப் பயன்படுகின்றன. சங்கத்தின் சின்னத்தை - பிரான்ஸ் தேசதது சிற்பியான றெனே டி சென்ற் மாகியா (**Rone De Saint Marceau**) தயாரித்தார். அவரால் கருங்கற்கள், பிததளை ஆகியவற்றைக் கொண்டுசெய்யப்பட்ட சிலை, 1909 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி பேரக் நகரில் திறந்துவைக்கப் பட்டது. அந்த சிலையிலுள்ள ஐந்து தூதுவர்களும் (பெண்கள்) - ஐந்து கண்டங்களாகவும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும், அவர்கள் பூகோளத்தைச் சுற்றி கடிதங்களை பரிமாறுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. இதுவே, சங்கத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை.

1874 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 189 நாடுகள் இச் சங்கத்தில் உறுப்புரிமை கொண்டுள்ள இலங்கையும் 1877 இல் உறுப்புரிமை பெற்றுக்கொண்டது. சர்வதேச தபால் அமைப்பு - உலக தபால் தினத்தை முன்னிட்டு, உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தபாலை விருத்திசெய்து, தபாலின் உரிய பிரயோசனத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இன்றைய பூகோள மயமாக்கல், தொடர்பாடல் முன்மாற்றம், தொழில்நுட்பம் காரணமாகத் துரிதமாகத் தகவல் பரிமாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. உலகம் சுருங்கிவிட்டது ஆனால், உணர்வுகள் விரிந்துவிட்டன. எவ்வளவு நவீன வசதிகள் வந்துவிட்டாலும், தபாலுக்கு மாற்றீடு இல்லை. மக்களின் மகிழ்ச்சிக்காகவே தபாற்சேவை என்ற கோட்பாடு என்றும், எங்கும், எதிலும் முதன்மையாக நிற்கின்றது. ஒட்டிய கவரில் வரும் உள்ளத்து உணர்வுகளை, இனிய, இன்ப நினைவுகளை அசைபோட்டு மீட்பதில்தான் எத்தனை இன்பம்? இதுவே தபாலின் மகத்துவம்.

வாரத்தில் ஆறு நாட்களும் ஒரு அஞ்சலர் சேவை செய்கிறார். ஒரு கடிதம் இருந்தால்கூட, ஒரு வீதிக்கு அவர் செல்லவேண்டும். அஞ்சலரைக் காணாதவர்கள் கிராமத்திலோ, நகரத்திலோ இருக்கமுடியாது. ஒரு அஞ்சலரின் பணி - புனிதமானது. எத்தனையோ ஆயிரம் மைல்களுகககு அப்பால் இருக்கின்ற அன்பு மகளின் இன்பக் கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தாய்க்கு, தபால் சேவகரின் பிரசன்னம் - எத்தனை ஆனந்தத்தை அளிக்கும் என்பதனை நினைத்துப் பார்க்கவேண்டும். ஒரு தபால்காரரின் மணியோசை அல்லது விசிலோசை - மக்களுக்கு பழகிவிட்ட அற்புதமான உணர்வோசையாகவும், உயிரோசையாகவும் இருப்பது ஆச்சர்யமான ஒன்றல்ல.

தபாலுக்காகக் காத்திருக்காத கண்கள் உண்டா? நியமனக் கடிதங்கள், வங்கிக் கடிதங்கள், அன்புக் கடிதங்கள், சமயக் கடிதங்கள், பிரசுரங்கள் எனப் பலவகைக் கடிதங்கள் - அஞ்சல் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்றன. இன்று யாழ். குடாநாட்டில் - 30 தபாலகங்களும், 167 உப தபாலகங்களும், 14 முகவர் தபாலகங்களும் இயங்கி அளப்பரிய சேவையாற்றுகின்றன. நாளாந்தம் வவுனியாவிலிருந்து தபால்கள் வருகின்றன. தபாற் திணைக்களம் தங்களாலான சிறந்த உயரிய சேவையை, இன்று யாழ். குடாநாட்டு மக்களுக்கு வழங்குகின்றது என்பது வெளிப்படை.


இன்றுவரை கடிதத்தின் தேவை குறையவில்லை. சர்வதேச விற்பன்னர்களின் கணிப்பின்படி - ஒவ்வொரு ஆண்டும் 2% கடித சேவை கூடிக் கொண்டேபோகின்றது. இது ஒரு சாதனை மட்டுமல்ல, உள்ளங்களின் உணர்வுப் பரிமாற்றத்தில், கடிதம் எத்துனை பங்கு வகிக்கின்றது என்பதற்கு அசையாத அச்சாணி போன்ற சான்று.

உலகம் விரியலாம், உணர்வுகள் விரியலாம், தொழில்நுட்பம் உயரலாம், விஞ்ஞான விந்தைகள் அதிசயத்தை ஏற்படுத்தலாம். ஆனால், மிக மலிவான விலையில் கிடைக்கும் ஒட்டப்பட்ட இரகசியம் பேணும் கடிதத்திற்கு மாற்றீடில்லை. இதுவே யதார்த்தம்.

அஞ்சலின் அருமையை உணர்வதற்கு, அஞ்சல் தினம் சகலருககும் உதவட்டும். தொழில் நுட்ப சவால்களை வெற்றிகண்டு, வீரியத்துடன் நடைபோடுகின்றது தபால். அதனால், தபால் மக்களின் உணர்வாகவும், உயிராகவும் இருப்பதில் விந்தையேதுமில்லை.

**- ச.சிவராஜசிங்கம்**

## அரசுக்கும் போராளிகளுக்கும் இடையில் நடந்த
# பத்தாண்டு காலப் போருக்கு ஓய்வு; ஒப்பந்தம் புறூண்டியில் கைச்சாத்து!



புறூண்டியில் 10 ஆண்டுகளாகத் தொடரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், அந்நாட்டு ஜனாதிபதி டொமிரிஏண் திட்டாயிசேயிக்கும் முக்கிய புரட்சிக் குழுக்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி தபோ மெபிசி நடுவராகச் செயற்பட்டார்.

பகைமையை உடன் முடிவுக்குக் கொண்டுவரவுள்ளதாகவும் புறூண்டி மக்களுக்கெதிராக தாம் போராடப் போவதில்லை எனவும் போராளிக் குழுத் தலைவர் மியெரி நிகுன்சிசா தெரிவித்தார்.

அரசுக்கும் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் மூலம் புறூண்டி படையின் நாற்பது வீதமான உயர்பதவிகளுக்கு போராளிக்குழு உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்படவுள்ளனர்.

அத்துடன் உபஜனாதிபதி பதவியும் நான்கு மந்திரிகள் பதவியும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடத்தப்பட்ட உல்லாசப் பயணிகளை விடுவிப்பதற்கு நிபந்தனை விதிக்கிறது கொலம்பிய புரட்சிகரப் படை!

மூன்று வாரங்களுக்கு முன்னர் கொலம்பியாவின் சிரியன் நெவடா மலைப் பகுதியில் காணமற்போன உல்லாசப் பயணிகளில் - பிரிட்டன், ஜேர்மன், ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூவரும், இஸ்ரேலைச் சேர்ந்த நால்வரும் தம்மிடம் உள்ளதாக கொலம்பிய புரட்சிகரப் படை என்ற அமைப்பு அறிவித்துள்ளது.

அவர்களுக்கு அரசின் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புகள் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களை விடுவிக்க வேண்டுமாயின் அரசாங்கத்தால் சிறைப்பிடிக்கப்பட்ட தமது அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களை விடுவிக்கவேண்டுமெனவும் அந்த அமைப்பின் கட்டளை அதிகாரி பெல்றன் அறிவித்துள்ளார்.

இதனிடையே, கடத்தப்பட்டவர்களை விடுவிக்கவேண்டுமாயின் தமது உறுப்பினர்களை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை கொலம்பியாவில் இயங்கும் மற்றுமொரு அமைப்பான பார்ஷும் முன்வைத்திருக்கிறது. இந்த அமைப்பும் தம்மால் கைதுசெய்யப்பட்ட அமெரிக்கர் மூவர் உட்பட 50 கைதிகளை இதுவரை விடுவிக்காமல் உள்ளது.

இதேவேளை - கொலம்பியப் புரட்சிகரப் படையால் கடத்தப்பட்டவர்களைச் சந்திப்பதற்கும் நிபந்தனை இன்றி அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் பொருட்டும், கத்தோலிக்கப் பாதிரிமார் மூவர் சிரியன் நெவடா மலைப்பகுதிக்குச் செல்லவுள்ளனர்.


# கலிபோர்னிய ஆளுநர் தேர்தலில் நடிகர் ஆர்னோல்ட் பெரு வெற்றி!



ஆணழகனாகத் தனது வாழ்வை ஆரம்பித்து பின்னர் திரைப்பட நடிகராக, பல வெற்றிப்படங்களில் நடித்த ஆர்னோல்ட் ஸ்வாசினேகர், கலிபோர்னிய மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் - அதன் கவர்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


இதுவரை அரைவாசி வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் 50 வீத வெற்றியை அவர் அடைந்துள்ளதாகக் அறிவிக்கப்பட்டுளளது.

வெற்றிநிச்சயம் என்ற நிலையில், தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்தும்போது - இன, மத, அரசியல் நிலைகளைத் தாண்டி கலிபோர்னிய மக்களுக்காக செயற்படப் போவதாக அவர் தெரிவித்தார்.



அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்ட தமது மதத் தலைவரை விடுவிக்குமாறுகோரி வீதியில் வரும் அவர்களின் டாங்கியின் குறுக்கே படுத்திருந்து ஆர்ப்பாட்டம் நடத்தும் சிட்னி முஸ்லிம்கள்.

# அணுவாயுதங்களைச் செலுத்தும் ஏவுகணையை இரண்டாவது தடவையாக பாகிஸ்தான் பரீட்சித்தது!



(இஸ்லாமாபாத்)

ஏவுகணைகள் மூலம் அணு ஆயுதங்களைச் செலுத்தக்கூடிய பரிசோதனைகளை ஒரு வாரத்துக்குள் இரண்டாவது முறையாக நேற்று பாகிஸ்தான் பரீட்சித்தது.

நேற்றுக்காலை நடத்தப்பட்ட இந்தப் பரிசோதனை எங்கிருந்து நடத்தப்பட்டது என்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை.

ஷகீன் 1 என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த ஏவுகணை, 435 மைல்கள் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது. அயல் நாடான இந்தியாவிலுள்ள அநேகமான தளங்களைத் தாக்கும் திறன் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் 6 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் பாகிஸ்தான் நடத்தும் முதலாவது பரிசோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லா வகையான அணு ஆயுதங்களையும் எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல்கொண்டதாக இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி சைளகாற் சுல்தான் தெரிவித்தார். அயல் நாடுகளுக்கு இந்தப் பரிசோதனை தொடர்பாக அறிவிக்கப்பட்டதாகப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

1998 ஆம் ஆண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் ஏட்டிக்குப் போட்டியாக அணு ஆயுதப் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

# 10 ஆயிரம் படையினரை ஈராக் அனுப்ப துருக்கி நடாளுமன்றம் அங்கீகாரம்!

ஈராக்கிற்கு 10 ஆயிரம் படையினரை அனுப்புவதற்கான அங்கீகாரம் துருக்கி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதன்கிழமை ஈராக்கிற்கான அமெரிக்க அதிகாரி போல் பிரிமருடன் ஈராக்கிய கவுன்சில் அங்கத்தவர்கள் நடத்திய கலந்துரையாடலில், துருக்கி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

வொஷிங்ரனுக்கும் ஈராக்கில் ஆட்சிசெய்யும் நிர்வாக சபைக்குமிடையேயான உறவுகள் பாதிப்படைந்து வருவதாக பி.பி.சியின் செய்தியாளர் யோன் பிரயின் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கின் நிர்வாகசபையில் அங்கம் வகிக்கும் குர்திஷ் அங்கத்தவர் மொகமட் ஒத்மன், ஈராக்கிற்கு துருக்கி தனது படையினரை அனுப்புவது பயனற்றதெனத் தெரிவித்தார்.

இதனிடையே ஈராக்கின் வட பகுதியில் துருக்கியர்களுக்கு எதிரான உணர்வுகள் வலுவடைந்துள்ளதாகவும், ஏற்கனவே துருக்கிப் படையினர் அப்பகுதியில் குர்திஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு எதிராக கடுமையாக போராடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




மகாவித்துவான் வீரமணி ஐயர் மறைந்தார் என்ற செய்தி கலைஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் மட்டுமல்ல பாமர மக்களுக்குமே அதிர்ச்சியளித்திருக்கும். இவரை தமிழகம் சரியாகக் கௌரவிக்கவில்லை என்பது எனது நீண்ட காலச் சாட்டு!

சில வாரங்களுக்கு முன் மறைந்த நாதஸ்வர மேதை என்.கே.பத்மநான் அவர்களின் உருவப்படம் நல்லை ஆதீனத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மகாவித்துவான் வீரமணி ஐயர் கலந்துகொண்டு என்.கே.பி. மீது ஆக்கிய பாடல்களைப் பாடினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே அவர் களைப்புற்றவராகவே காணப்பட்டார். உடல்நிலை நன்றாக இருக்கவில்லை. அவரது தேகநிலை கருதியோ நேரம் கருதியோ மகாவித்துவான் அதிகநேரம் பேசுவதைத்தவிர்த்துக் கொள்ளுமாறு நிகழ்வை நடத்திய அன்பர் குணராசா ஆலோசனை கூறி உதவினார்.

'கற்பக வல்லிநின் பொற்பதங்கள்' என்ற பாடல் டி.எம்.சௌந்தரராஜன் குரலில் இசைத்தட்டில் ஒலிக்கும்போது ஒரு நிமிஷம் நின்று அதை இரசித்துக் கேட்காதவர் இருப்பார்களா தெரியவில்லை.

இந்தப் பாடலை இயற்றிய பெருமகனார் யாழ்ப்பாணம் இணுவில் வீரமணி ஐயர் என்பது இப்பாடலைப் பாடிப் புகழ்பெற்ற டி.எம்.சௌந்தரராஜனுக்கு முதலில் தெரிந்திருக்கவில்லை. இங்கு அவர் வந்தபோதும் அறிந்திருக்கவிலலை.

பல வருடங்களுக்கு முன் டி.எம்.எஸ் யாழ்ப்பாணம் வந்திருந்தார். வல்வெட்டித்துறையில் பிரபல்யம் பெற்று விளங்கிய வீரபாகு அவர்களுடைய வீட்டில் தங்கியிருந்தார். அவரைச் சந்தித்துப் பேட்டி காண்பதற்கு ஈழநாடு பத்திரிகை சார்பாக நான் போயிருந்தேன்.

டி.எம்.எஸ்ஸைச் சந்தித்துவிட்டு நான் வெளியே வந்தபோது அவரது குழுவில் வந்திருந்த ஒருவருடன் வீரமணி ஐயர் அவர்கள் பேசிக்கொண்டு நின்றார். அந்தப் பேர்வழிக்கு கற்பகவல்லி என்ற பாடல் பற்றியே தெரியவில்லை. நான் இதில் தலையிடலாமா என்று யோசித்தபோதே ஒருவர் வந்து ஐயரவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். நான் வந்துவிட்டேன்.

டி.எம்.எஸ், இணுவிலுக்குச் சென்ற வீரமணி ஐயர் அவர்களைச் சந்தித்திருக்க வேண்டுமென்பது எனது கருத்து.

இதன்பின் தமிழகத்திலிருந்து வந்த கலைஞர்கள் வித்துவான்களைப் பாராட்டி ஐயர் அவர்கள் வாழ்த்துப்பா பாடி அளித்தார்கள். மதுவரை சோமு என்றழைக்கப்பட்ட பெரும் வித்துவான் சோமசுந்தரம் அவர்களை வாழ்த்திப் பாடியிருந்தார். அது வரவேற்கக் கூடியது. பின்னரும் வேறுயார் யாரோவெல்லாம் வந்தார்கள். இவர்களுக்கும் ஐயவரவர்கள் வாழ்த்துப்பாடி வழங்கினார்.

வீரமணி ஐயா இந்தியாவிலிருந்து வரும் எல்லோருக்கும் வாழ்த்துப்பா பாடி வழங்கிக் கொண்டிருக்கிறார். ஆனால் தமிழகம் அவருக்குக் கொடுக்கவேண்டிய கௌரவத்தைக் கொடுக்கிறதா என்று தேவன், யாழ்ப்பாணம் கலைஞர் கே.கே.வி.செல்லையா ஆகியோருடன் நடந்த சம்பாஷணையின்போது நான் கேட்டேன். எனது கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இதன்பின் இதுபற்றி ஈழநாடு பத்திரிகையில் ஊர்சுற்றிப் பத்தியில் எழுதினேன். தமிழகத்திலிருந்து வருபவர்கள் எல்லோரையும் வாழ்த்திப் பயனில்லை. தகுதியானவர்களை வாழ்த்துங்கள் என்று எழுதினேன்.

இதைப்பற்றி சிலர் ஐயர் அவர்களிடம் வேறு விதமாக என்னைப்பற்றிச் சொல்லி சிண்டுமுடித்துவட்டார்கள். சில வருடங்களுக்குப் பின்னரே அவர் தமது தப்பபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டார்.

ஐயர் அவர்களின் பாடல்கள் பல தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. எத்தனை கோவில்களுக்கு ஊஞ்சல் பாட்டுப் பாடியிருக்கிறார். எத்தனை கோயில்களுக்கு பாமாலை பாடியிருக்கிறார். எண்ணிக்கை தெரியாது.

எத்தனை நாட்டிய நாடகங்களை உருவாக்கியிருக்கிறார். அவர் இயற்றிய சாகித்தியங்கள் எத்தனை. நாட்டியத்துக்கும் நட்டுவாங்கம் செய்திருக்கிறார்.

வீரமணி ஐயர் அவர்களின் திடீர் மறைவினால் யாழ்ப்பாணம் மற்றொரு மாமேதையை இழந்துநிற்கிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இராணுவத்தினர் - புலிகள் முறுகல்; பொலிஸாரின் தலையீட்டால் சமரசம்

இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகள் உறுப்பினருக்கும் இடையில் ஏற்படவிருந்த முறுகல் நிலையொன்று சமரசமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் பலாலி வீதி இலுப்பையடிச் சந்திப்பகுதியில் இடம்பெற்றது. பலாலி வீதியினூடு மோட்டார் சைக்கிளில் வந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவரை இலுப்பையடிப் பகுதியில் நின்ற பொலிஸார் ஒருவர் வழிமறித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர் வீதியின் ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நின்றபோது, அங்கு வந்த பொலிஸார் மோட்டார் சைக்கிள் திறப்பை பூட்டி எடுத்துள்ளனர். பூட்டி எடுத்த திறப்பை இராணுவத்தினரிடம் பொலிஸார் கையளித்ததையடுத்தே முறுகல் நிலை ஏற்பட்டது.

விடுதலைப் புலிகள் உறுப்பினர் தனது அடையாள அட்டையைக் காட்டியும், பொலிஸாரும் இராணுவத்தினரும் அவரைத் தடுத்து வைத்திருந்தனர்.

இது தொடர்பாக உடனடியாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவிக்கப்பட்டது.

அங்கு வந்த கண்காணிப்புக் குழுவினர் இருதரப்பினருக்குமிடையே சமரசம் செய்ய முயன்றனர்.

சம்பவ இடத்திற்கு வந்த விடுதலைப் புலிகளின் நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் இந்தப் பிரச்சினையை பொலிஸாரின் தலையீட்டோடு தாம் தீர்க்க விரும்புவதாக கூறியதையடுத்து இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளின் திறப்பை மீள ஒப்படைத்தனர்.

பின்னர் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு சென்ற விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பொலிஸாருடன் பேசி பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்ததாகத் தெரியவருகிறது.

## கஞ்சிகுடிச்சாற்றில்

# புதிய முகாம் எதையும் அமைக்கவில்லை; கண்காணிப்பு குழுவுக்கு புலிகள் காண்பிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கஞ்சிகுடிச்சாறு பாவட்டா பகுதியில் விடுதலைப் புலிகள் புதியமுகாம் எதையும் அமைக்கவில்லையென்ற உண்மையை நேற்று அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு நேரில் காண்பித்து உறுதிப்படுத்தினர்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தேரியா ஹல்வர்ஸனை, நேற்று சம்பந்தப்பட்ட பாவட்டா முகாம் பகுதிக்கு நேரில் அழைத்துச்சென்று உண்மை நிலையைத் தெளிவுபடுத்தினார்.

இவர்களுடன், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அக்கரைப்பற்று அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் எச்.எம்.றசீதும் பாவட்டா முகாம் பகுதிக்கு சென்றிருந்தார்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் அம்பாறை மாவட்ட தலைவர் தேரியா ஹல்வர்ஸன் நிலைமையை நேற்று நேரில் ஆராய்ந்து உண்மை நிலையை புரிந்துகொண்டார்.

பாவட்டா முகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் உயர்மட்ட சந்திப்புக்களுக்கான மண்டபம் ஒன்றையே அமைத்துள்ளனர் என்பதை, அவர் ஏற்றுக்கொண்டு திருப்தி தெரிவித்ததாக, விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். கஞ்சிகுடிச்சாறு - பாவட்டா முகாம் பகுதியில் தாம் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல் எதிலும் ஈடுபடவில்லை என்றும், படையினர் வீண்பழியே சுமத்தியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (07)

### மிதிவெடி வெடித்து இளைஞர் காலிழப்பு!

தலைமன்னார் - பியர் பகுதியில் மிதிவெடியில் சிக்கி இளைஞரொருவர் தனது இடதுகாலை முழங்காலுக்கு கீழ் இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை 5 மணிக்கு இடம்பெற்றது.

தலைமன்னார் - பியர் பகுதியில் நேற்றுமாலை தனது வீட்டைப் பார்க்கச் சென்ற சிவகரன் (வயது 23) என்ற இளைஞருக்கே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

# குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற துரிதமாக நடவடிக்கை எடுங்கள்!

## பாதுகாப்பு அமைச்சரைக் கோருகிறது சிஹல உறுமய

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை அங்கிருந்து அகற்ற துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதுகாப்பு அமைச்சரை கோரவுள்ளதாக சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

குரங்குபாஞ்சான் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைந்துள்ளதால் விடுதலைப் புலிகள் தமது முகாமினை அங்கிருந்து அகற்றும் பொறுப்பு அரசாங்கத்தையே சாருமென சிஹல உறுமய மேலும் தெரிவித்தது.

நாட்டின் பிரஜை என்ற ரீதியில் நாட்டின் எந்தப் பகுதிக்கும் விஜயம் செய்யும் உரிமை தமக்கு உள்ளதாகவும், குரங்குபாஞ்சான் முகாமினை பார்வையிட தமக்கு அனுமதி தரவேண்டுமெனவும் சிஹல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக புலிகளுக்கும் அரசுக்கும் இடையே இழுபறி நிலை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டுப் பற்றாளர்கள் நினைவாக இன்று துக்கதினம் அனுஷ்டிப்பு!

அம்பாறை - காஞ்சிரங்குடா பகுதியில் கடந்த ஆண்டு விசேட அதிரடிப்படையினரால், சுட்டுக் கொல்லப்பட்ட ஏழு நாட்டுப்பற்றாளர்கள் நினைவுதினம் இன்று அம்பாறை மாவட்டத்தில் துக்கதினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று பிற்பகல் மூன்று மணி முதல் இரவு ஏழுமணிவரை அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல தமிழ், முஸ்லிம் வர்த்தக நிலையங்களையும் மூடி துக்கம் அனுஷ்டிக்குமாறும் இந்து ஆலயங்களில் மணியோசை எழுப்புமாறும் துக்கதின ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஏழு நாட்டுப்பற்றாளர்களினதும் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் இன்று மாலை வேலூரான் எஸ்.விவேகானந்தன் தலைமையில் இரங்கல் கூட்டமும் நடைபெறவுள்ளது.

# கராத்தே சம்மேளனம் நடத்தும் மாகாண மட்ட சுற்றுப்போட்டி!

வடக்கு - கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனம் வருடாந்தம் நடத்தும் கராத்தே சுற்றுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத் தலைவர் ரீ.கே.கேந்திரமூர்த்தி தலைமையில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் இச் சுற்றுப்போட்டி நடைபெறவிருப்பதாக சம்மேளனப் பொதுச்செயலாளர் ஏ.ஆர்.மொஹமட் இக்பால் தெரிவித்தார்.

இச்சுற்றுப் போட்டியில் இலங்கை கராத்தே சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் பதிவுசெய்யப்பட்ட கழகங்கள் மட்டுமே பங்குபற்றவிருப்பதாகவும், "குமித்த" "காட்டா" எனும் இரு நிகழ்வுகளாகப் போட்டி நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒன்பது வயது முதல் 18 வயதுவரையானவர்கள் வயது அடிப்படையிலும், 18 வயதுக்கு மேற்பட்ட கியூ தரத்திலுள்ளவர்கள் கிலோ கிராம் அடிப்படையிலும், 18 வயதுக்கு மேற்பட்ட கறுப்புப்பட்டியினர் கிலோகிராம் அடிப்படையிலும் இச் சுற்றுப் போட்டியில் பங்குகொள்ளவுள்ளனர்.

இச்சுற்றுப் போட்டியின் ஒவ்வொரு பிரிவுகளிலும், முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவர்.

மேலும், இச்சுற்றுப் போட்டியில் அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் பங்குகொள்ளவுள்ளதாகவும் சம்மேளனப் பொதுச் செயலர் மொஹமட் இக்பால் தெரிவித்தார். 12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஏ.ஜீ.ஹுசைன் இஸ்மாயில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். (07)

# புலிகளுடன் இணைந்தவர்களை ஊடகவியலாளர்கள் சந்தித்தனர்!

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பில் தாமாக இணைந்த 11 பேரையும் நேற்று ஊடகவியலாளர்கள் சந்தித்தனர்.


நேற்றுக்காலை மட்டக்களப்பு கரடியனாற்றில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தேனகம் விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த இவர்கள் தாம் விடுதலைப் புலிகள் அமைப்பில் எவரது வற்புறுத்தலும் இல்லாமலேயே இணைந்ததாகத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கிருஷன், நாம் உண்மை நிலையை வெளியில் தெரியப்படுத்துவதற்காகவே ஊடகவியலாளர்களை இங்கு கூட்டி வந்தோம். சில ஊடகங்கள் பூதாகாரமாகவும் திரிபுபடுத்தியும் சில செய்திகளை வெளியிடுகின்றன. எமது அமைப்பிற்கு பலாத்காரமாக ஆட்களை திரட்டவேண்டும் என்ற எந்த நோக்கமும் கிடையாது. நாம் அப்படிச் செய்யவுமில்லை எனத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கட்டாயமான முறையில் தமது அமைப்புக்கு ஆட்களைச் சேர்க்கின்றார்கள் என கடந்த சில நாட்களாக செய்திகள் வெளிவந்ததையடுத்து இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடுசெய்யப்பட்டது எனத் தெரியவருகிறது. (07)

### வித்துவான் வீரமணி ஐயர் காலமானார்



(யாழ்ப்பாணம்)

வித்துவான் வீரமணி ஐயர் நேற்று அதிகாலை காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 62. இசை மாமணி என்றும், இயலிசை வாரிதி என்றும் தமிழ்மக்களால் பாராட்டப்பட்ட இவரின் இழப்பு எல்லோருக்கும் பேரிழப்பாகும்.

நேற்று இணுவிலில் உள்ள அன்னாரது மரணச்சடங்கில் பெருமளவானோர் கலந்துகொண்டனர். பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை, யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பலர் நேற்று அஞ்சலியுரை நிகழ்த்தினர். (88)

# உடுப்பிட்டியில் கடத்தப்பட்ட மூவர் செம்மணி மயானத்தில் மீட்கப்பட்டனர்

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் இனந்தெரியாத கும்பலொன்றினால் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

வானொன்றில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்ட இம்மூவரும் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் செம்மணி மயானப்பகுதியில் நேற்று அதிகாலை மீட்கப்பட்டனர்.

இந்த மூவரையும் தாக்கிய நபர்களே மயானப்பகுதியில் இவர்களைக் கைவிட்டுச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலினால் காயமுற்ற இந்த மூவரும் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (202)

# நீராவியடி கொலைச் சம்பவம்; நீதிமன்றில் வாக்குமூலம் பதிவு!

(யாழ்ப்பாணம்)

நீராவியடிப் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூவரின் வாக்குமூலங்கள் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனால் பெறப்பட்டது.

பொலிஸாரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் மூவரையும் நேற்று பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

எனினும், இந்த கொலைச் சம்பவத்தின் முக்கிய சாட்சி தலைமறைவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பொங்கு தமிழ்...

மையில் நடந்த இந்தச் சந்திப்பில், பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரின் சார்பில் தலைவர் றீகன், உபதலைவர் பி.சித்தாந்துரை, வின்சன் ஆகியோரும் படைகளின் தரப்பில், மன்னார் மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் பெர்ணாண்டோ, எ.பி.சாந்தகொட, பொலிஸ் தலைமை அதிகாரி ஐ.பி.பியசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - பொங்கு தமிழ் ஏன் நடத்தப்படுகின்றது, அதன் நோக்கம் என்ன போன்ற பல விடயங்கள் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரால் படைத்தரப்பினருக்கு விரிவாக விளக்கப்பட்டது. (201)

### ராணுவ...

இதனையடுத்து, அந்தப் பகுதியில் படையினர் குவிக்கப்பட்டு பதற்றமான சூழல் காணப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததையடுத்து பதற்ற நிலை சற்றுத் தணிந்து காணப்பட்டது.

கடந்த ஒருவாரகாலப்பகுதியில் இராணுவத்தினரின் வாகனங்களால் பொதுமக்கள் மோதப்பட்ட மூன்றாவது சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (202)

### பிரதமர்...

இந்தியா செல்லும் பிரதமர் ரணில் - இந்திய பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங், எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனத் தெரியவருகிறது.

ஒளிரும் காலம் இழந்துபோன
ஒரு அழகான ஓவியத்துக்கு எங்கள்

கண்ணீர் அஞ்சலி



செல்வன் மாசிலாமணி ஸ்ரீகாந்தன்

அவர்கள் 07.10.2003 அகாலமரணமான செய்திகேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தின் துயரில் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

சோமஸ்கந்தராசா குடும்பத்தினர்,
சின்னத்துரை குடும்பத்தினர்,
உதயகுமார் குடும்பத்தினர்,
விஜயகுமார் குடும்பத்தினர்,
குணரத்தினம் குடும்பத்தினர்.

வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு. (500)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.